Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 19 சனிக்கிழமை (05.11.2011) பக்கங்கள் 16 ஓசை – 36

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1049)



அனோமாவிற்கு வழக்கு (08)



ஐஸ்வர்யா ராய்க்கு சிசேரியன் (13)



சரிந்து போகும் புலிகளின் செல்வாக்கு (11)



கதிரைக்கு முக்கியத்துவம் (14)

## ஐ.நா. தவறிழைத்தால் விசாரணை நடத்தலாம்



(கொழும்பு)

இலங்கையில் நான்காம் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தின் போது ஐ.நா. முறைமை தோல்வி கண்டமை தொடர்பாக அவர்கள் (ஐ.நா.) தங்களைத் தாங்களே விசாரணை நடத்த விரும்பினால் அவர்களால் அதனைச் செய்ய முடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. தவறிழைத்ததாகத் தெரிவிக்கப்படுவது குறித்து விசாரணை நடத்த யூ.என்.எவ்.பி.ஏ.இன் முன்னாள் பணிப்பாளர் தோரயா ஒபாய்ட்டை ஐ.நா. நியமித்திருப்பது தொடர்பாக நிலைப்பாடு எதனையாவது இலங்கை கொண்டிருக்கின்றதா என்று (15 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு சென்று முறையிடாமலிருக்க பிரச்சினைக்கான தீர்வை வழங்குங்கள்

### அரசைக் கோருகிறார் சித்தார்த்தன்



(கொழும்பு)

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதை தடுப்பதற்காகவே பேரினவாதிகள் கூட்டமைப்பின் வெளிநாட்டு விஜயத்திற்கு இனவாதச் சாயம் பூசுகின்றனர் என்று புளொட் இயக்கத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாட்டுக்குள் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அக்காலங்களில் வெளிநாடுகளுக்கு சென்று முறைப்பாடு செய்துள்ளமை வரலாறாகுமென்றும் அவர் கூறினார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் அரச அதிபர் மீளவும் முல்லைக்கு?


(கொழும்பு)

வடமாகாணங்களுக்கான அரச அதிபர்களை இடமாற்றும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக தற்போது உள்ள வேதநாயகன் மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராகவும், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராகப் பணிபுரிந்து வருகின்ற பத்திநாதர் மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபராகவும் பணி (15 ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டு பாரிய திட்டம் சீனாவுடன் ஒப்பந்தம்



(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள இரண்டு பாரிய திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு சீனாவைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது.

இதன்படி நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்திக் கொள்ளவென யான் ஓயா திட்டம் என்ற பெயரில் புதிய நீர்த்தேக்கம் ஒன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தில் சீனாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று கைச்சாத்திட்டுள்ளது.

நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சுக்கும் சீனாவின் பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் இதற்கான (15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகளை திருப்பியனுப்ப சுவிற்சர்லாந்து நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த அகதிகளை திருப்பி அனுப்பும் முடிவுக்கு சுவிற்சர்லாந்தின் சமஷ்டி நிர்வாக நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதாக சுவிற்சர்லாந்து உலக வானொலி தகவல் வெளியிட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு குடியேற்றத்துக்கான சுவிஸ் சமஷ்டி பணியகம் முடிவு செய்திருந்தது.

ஆனால் திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகள் இலங்கையில் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படும், சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படும் ஆபத்து இருப்பதாக சமஷ்டி நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், 2009 இல் இலங்கை இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுக்கு வந்ததை அடுத்து, இலங்கையில் பாதுகாப்பு நிலைமைகள் பொதுவாக முன்னேற்றம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் வசமுள்ள வீடுகளை மீளவும் பெற்றுத்தர நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு



(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் படைத்தரப்பின் வசமுள்ள 115 வீடுகளை மீளவும் பெற்றுத் தருவதற்கு இராணுவத் தளபதியிடம் தொடர்பு கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் உறுதிமொழி வழங்கினார்.

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பருத்தித்துறை வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஈடுபடும் நபர்கள் மீது பொலிஸார் உடன் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவரை நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டுமென்றும் பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கினார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் சொத்து அரசுடைமை பிரேரணை அரசியல் பழிவாங்கல் என்கிறது ஐ.தே.க



(கொழும்பு)


இலாபமீட்டாத தனியார் நிறுவனங்களின் சொத்துக்களை அரசுடமையாக்குவதற்காக அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள பிரேரணையானது அரசியல் பழிவாங்கல் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளும் பட்சத்தில் இந்த சட்டத்தின் மூலம், கொழும்பில் 20 ஏக்கர் நிலத்தினை அரசாங்கம் தம்வசப்படுத்தும் என நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அரசுடமையாக்கும் நடவடிக்கைக்காக 36 (15 ஆம் பக்கம் பார்க்க)

## காணிப் பிரச்சினையை தீர்க்க தேசவழமைச் சட்டம் இரத்து

### எல்லாவல மேதானந்த தேரர் கோரிக்கை



(கொழும்பு)

தேசவழமைச் சட்டத்தை உடன் இரத்துச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர், வடக்கில் இன்று ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சினைக்கு இந்தச் சட்டமே மூல காரணம் என்றும் கூறினார். இந்தச் சட்டத்தை இரத்துச் செய்வதன் மூலம் இலங்கை நாட்டிலுள்ள அனைவரதும் காணிப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு: (15 ஆம் பக்கம் பார்க்க)

# தாதியர்களுக்கு முதற் தடவையாக அலரி மாளிகையில் பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு அலரி மாளிகையில் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள அகில இலங்கை ரீதியில் தாதிய டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வில்,

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 'தாதிய டிப்ளோமா' பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 165 பேருக்குப் பட்டம் வழங்கப்படவுள்ளதாக பயிற்சிக் கல்லூரி அதிபர் செல்வி.ஆர். வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்த வருடமே தாதியர்களுக்கு முதன் முதலாகப் பட்டமளிப்பு நடைபெறுகிறது. இதுவரை காலமும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதே தவிர பட்டமளிப்பு விழா என நடைபெறுவது இதுவே முதற் தடவையாகும்.

எமது கல்லூரியிலிருந்து இவ்வருடம் 105 பெண் தாதிய மாணவர்களும், 60 ஆண் தாதிய மாணவர்களும் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவுள்ளனர்.

இவர்கள் பட்டமளிப்பு விழாவிற்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, வவுனியா தாதியப் பயிற்சிக் கல்லூரியிலிருந்து 81 மாணவர்களும், மட்டக்களப்பு தாதியப் பயிற்சிக் கல்லூரியிலிருந்து 65 மாணவர்களும் பட்டமளிப்பில் பட்டம் பெறவுள்ளனர்.

இந்த மூன்று கல்லூரிகளிலுமே தமிழ்மொழி மூலம் போதனைகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார். (54)

## கிணற்றில் விழுந்து பெண் உயிரிழப்பு

(ஆனைக்கோட்டை)

உயரப்புலம் - ஆனைக்கோட்டைப் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் தவறுதலாகக் கிணற்றில் வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சேந்தான்குளத்தைச் சொந்த முகவரியாகக் கொண்ட மரியபுஸ்பம் (வசந்தா) வயது-50 என்பவரே மரண்மடைந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி யாழ். பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து நேற்றுமாலை 4.00 மணியளவில் சடலம் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டு மேலதிக விசாரணையின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (எஸ்)

## முதியோர் தின நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை நடத்தும் முதியோர் தின விழா இன்று காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் எஸ்.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வடமாகாண பிரதம செயலாளர் பணிமனையின் உதவிச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (140)

## மின்தடை அறிவித்தல்

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் 07.11.2011 திங்கட்கிழமை 09.11.2011 புதன்கிழமை 12.11.2011 சனிக்கிழமை மற்றும் 14.11.2011 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், புன்னாலைக் கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினை பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

08.11.2011 செவ்வாய்கிழமை, 11.11.2011 வெள்ளிக்கிழமை 13.11.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

## இந்தியக் கலைஞர்களின் அரங்க நிகழ்வுகள் நாளை



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் மானு மற்றும் சிங்கப்பூர் வண்ட் ஆர்ட் தியேட்டருமஇணைந்து யாழ்ப்பாணத்தில் நாடகம், கதம், பரதநாட்டிய நிகழ்வுகளை நடத்தவுள்ளன.

நாளைய தினம் பிற்பகல் 3.00 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரபல சிங்கப்பூர் நடிகர் புரவலரின் பிதாமகர் பீஷ்மன் நாடகமும், தென்னிந்திய "காதல் மன்னன்" புகழ் கதாநாயகி மானுவின் பரத நாட்டியக் கதம்ப நிகழ்வும் அரங்கேறவுள்ளன.

குரு வம்சத்தின் குல குருவும், பாண்டவ கௌரவர்களின் பாட்டனாரும், பிதாமகருமாகிய பீஷ்மர் எனும் தேவவிரதரரின் வாழ்க்கை வரலாற்றை பீஷ்மர் நாடகம் ஆராய்கிறது.

இந்நிகழ்வினை பார்ப்பதற்கென 3 வகையான ரிக்கட் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணர்வர்களுக்கு 250 ரூபாவும், ஏனையோருக்கு 500, 1000 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

இது தொடர்பான விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று மாலை யாழ்.சிற்றி ஹோட்டலில் நடைபெற்றது. இதில் சிங்கப்பூர் 'அவண்ட் தியேட்டர் லாங்குவேஜ்' இயக்குநர் எஸ்.ஜி.செல்வந்தன் மற்றும் காதல் மன்னன் திரைப்படக் கதாநாயகி மானு ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர். (எப்.எஸ்)

## வணிகப்போட்டி

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான வணிகப் போட்டி இன்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. வலய மட்டத்தில் முதல் 3 இடங்களையும் பெற்றவர்களைக் கலந்துகொள்ளுமாறு வடமாகா ணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (12)

## சிறு விளம்பரம்


**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel- 021 222 8680, 0775925088 (C/1051)




சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் ஓவியம், பேச்சு மற்றும் விவாதப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்தகபண்டார, வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் இராஜேந்திரன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் குபேரநாதன் ஆகியோர் ஓவியப் போட்டியைப் பார்வையிடுவதையும், போட்டியில் வெற்றி பெற்ற மாணவன் ஒருவருக்கு சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சான்றிதழ் வழங்குவதையும் காணலாம்.

# நீதிமன்றச் செய்திகள்

## சிறுகுற்ற அபராதம்

(யாழ்ப்பாணம்)

கஸ்தூரியார் வீதிப் பகுதியில் நகரை அசுத்தப்படுத்தும் விதமாக இளநீர் கோம்பை மற்றும் போத்தல்களை வீசிய மூவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் யாழ்.நீதிவான் நீதிமன்றம் விதித்துள்ளது.(எஸ்)

✧ ✧ ✧ ✧ ✧

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப் பகுதியில் மது அருந்திவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த ஐந்து நபர்களுக்கு எதிராக 20 ஆயிரம் ரூபா யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

✧ ✧ ✧ ✧ ✧

(சாவகச்சேரி)

நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்ட நபர் ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குறித்த நபருக்கு 500 ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (உ-11)

✧ ✧ ✧ ✧ ✧

(சாவகச்சேரி)

கெற்பேலிப் பகுதியில் உள்ள வீடொன்றில் அத்துமீறி நுழைந்து தாக்குதல் செய்ய முயன்ற நபர் ஒருவரைக் கொடிகாமம் பொலிஸார் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி மா.கணேசராசா குறித்த நபருக்கு 1000 ரூபா அபராதம் விதித்ததுடன், 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (உ-11)

✧ ✧ ✧ ✧ ✧

(சாவகச்சேரி)

மீசாலை வடக்குப் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் குப்பைகளைக் கொட்டிய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தினால் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (உ-11)

## நீதிமன்றில் பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸாரினால் யாழ். நீதிமன்றில் வழக்கு மேற்கொள்ளப்பட்ட AR/608 2011 இல் ஒரு ஒரு கை பேர்ஸ் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனை உரிமை கோருபவர்கள் யாழ். நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அ.வன்னியசிங்கத்துடன் தொடர்புகொண்டு உரிய ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## நீதிமன்ற அறிவித்தல்கள்

(சாவகச்சேரி)

எதிர்வரும் 7 ஆம் திகதி பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அன்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெறவிருந்த வழக்குகள் யாவும் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா அறிவித்துள்ளார். (உ-11)

✧ ✧ ✧ ✧ ✧

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 7 ஆம் திகதி பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அன்றைய தினம் யாழ். நீதிமன்றத்தில் நடைபெறவிருந்த வழக்குகள் யாவும் மார்கழி மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (உ-11)

## வடமராட்சியில் பண்பாட்டு விழா

வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை நடத்தும் பிரதேச பண்பாட்டு விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோவில் தர்வதவர்தினி கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகவும், யாழ்.பிராந்திய மக்கள் பணி உத்தியோகத்தர் மு.சிவநேசன் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (116)

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை விவசாயபீடம்

**புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு**

விவசாய பீடத்திற்கு 2010/2011 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 07.11.2011 நடைபெறமாட்டாது.

எதிர்வரும் 08.11.2011 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு விவசாய பீட பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகும்.

அனைத்து புதுமுக மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்.
04.11.2011. (C/1057)

புத்தக அறிவு மட்டும், பயன்தராது அது மேலோட்டமான அறிவு, ஆழ்ந்த பயன் தரக்கூடிய அறிவைத்தேடுங்கள் அதைக்கொண்டு புத்தியைப்பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

- பாலா.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சர்வதேசத்தின் அடுத்த கிடுக்கிப்பிடி?

முப்பது ஆண்டுகளாக நீங்கள் போராடியது மகிந்த ராஜபக்ஷவைத் தூக்கில் போடுவதற்கா? என்று அந்த அமெரிக்க ராஜதந்திரப் பெண்மணி கேட்டது, நம் ஊடகச் சூழலின் அபத்தக் கூச்சல்களைப் பார்க்கும்போது எவ்வளவு பொருத்தமான கேள்வி என்று திரும்பத் திரும்ப நினைக்கத் தோன்றுகிறது.

நமது அத்தனை போராட்ட முயற்சிகளும் மக்கள் வாழ்வுநல அக்கறைகளும் போர்க்குற்ற விசாரணையில் தொங்கிக் கொண்டிருப்பதாக மாறிவிட்டது. 'லண்டனுக்குப் போனால் ராஜபக்ஷவைக் கைது செய்யாமல் விடமாட்டார்கள்', 'அமெரிக்கா போகிறார் ஆளை ஒரே அமுக்காய் அமுக்கிவிடப் போகிறார்கள்' என்றெல்லாம்... எதுவோ அழுகி விழப் போகிறது ஏந்தலாம் என்று ஆட்டுக்குப் பின்னால் போன பிராணியைப் போல தமிழ்மக்களை ஆக்கி வைத்திருக்கின்றன இந்த ஊடகங்கள்.

இவர்கள் தமிழ்மக்களுக்குப் போட்டுக் காட்டும் 'பிலிம்' எதுவும் உண்மையில் நடக்காமல், அரசாங்கத்தாரை அரசாங்கத்தாரே காமுறுவர் என்பதுபோல விஷயங்கள் இவர்கள் எதிர்பார்க்கும் வில்லங்கங்கள் ஒன்றுமில்லாமல் முடிந்துவிடுகின்றன. இருந்தாலும் சளைக்காமல் அடுத்து எதிரி எங்கே மாட்டுப்படுவான் என்று பார்த்திருக்கிறார்களே அல்லாமல், மக்களின் வாழ்வை வதைபாடுகளிலிருந்து மீட்க எதையாவது செய்யலாமே என்று இவர்கள் எண்ணுவதில்லை. அதற்கெனத் துரும்பெதையும் எடுத்துப் போடுவது கூட இல்லை.

பொதுநலவாய மாநாட்டுக்காக இலங்கையிலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழு அவுஸ்ரேலியா சென்றபோது, இலங்கைக்கு எதிராக பல நகர்வுகள் இடம்பெறுவதாக பிரமைகளைக் குவிக்க ஆரம்பித்தன நம் ஊடகங்கள். இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் போர்க் குற்றங்களில் சிக்குகிறது இலங்கை அரசு என்று நாளுக்கு நாள் நேர்முக வர்ணனைகள் களைகட்டின.

இதில் முக்கியமான விடயங்களாக,

ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக அவுஸ்ரேலிய நீதிமன்றம் ஒன்றில் தாக்கல் செய்யப்பட்ட போர்க்குற்ற வழக்கு, அடுத்த பொதுநலவாய மாநாட்டை 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் நடத்துவதற்கு எதிராக கனடா மேற்கொண்ட முயற்சிகள், ஜனாதிபதிக்கும் இலங்கைக்கும் எதிராக புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம் ஆகியவற்றின் மீது தமிழர் கவனம் குவிக்கப்பட்டன.

பொதுநலவாய மாநாட்டுக்கு ஜனாதிபதி இலங்கையிலிருந்து செல்லும் முன்பே அவுஸ்ரேலியா குடியுரிமை பெற்றுள்ள இலங்கைத் தமிழர் ஒருவர் மெல்போர்ன் நீதிமன்றத்தில் மஹிந்தவுக்கு எதிராக போர்க்குற்ற வழக்கொன்றை தாக்கல் செய்தார்.

இந்நிலையில் அவுஸ்ரேலியாவிற்கு சென்ற ஜனாதிபதி, அந்நாட்டு பிரதமர், வெளிவிவகார அமைச்சர், மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடுவதில் எவ்விதத் தடையையும் எதிர்நோக்கவில்லை.

ராஜபக்ஷவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை விசாரிக்க அனுமதியளிக்க முடியாதெனவும், சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் அவுஸ்ரேலிய அரசுக்கு உள்ள பொறுப்புகளையும், உள்நாட்டுச் சட்டங்களையும் மீறும் வகையில் வழக்கு இருப்பதால் அனுமதி மறுக்கப்பட்டதாகவும் அந்நாட்டு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்தது.

இதேபோல அண்மையில் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத்தொடரிலும் இலங்கைக்கு இருக்கிறது விளையாட்டு என்றே நம் ஊடகங்கள் குதித்தன. அந்த கூட்டத் தொடர் முடிவடைந்த நிலையில் இலங்கைக்கு திரும்பிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க சர்வதேசம் எம்மை ஒன்றும் செய்து விடாது என்று குறிப்பிட்டிருந்தார். அதேபோலதான் அவுஸ்ரேலியா சட்டமா அதிபர் திணைக்களம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கை விசாரிக்க முடியாதென மேற்கொண்ட தீர்மானமானது சர்வதேச ரீதியில் இலங்கை ஜனாதிபதிக்கு மிகப்பெரும் பாதுகாப்பை அளித்துள்ளதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

இந்தியாவின் பலமான ஆதரவின் துணையுடன் 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவதும் உறுதி செய்யபபட்டுள்ளது. கூட்டமைப்பைப் பார்க்க பான் கீ மூனும் மறுத்து விட்டார்.

அடுத்தது என்ன? ஊடகங்களும், பிற்போக்குத் தமிழ்த் தீவிரவாதிகளும் சேர்ந்து "சர்வதேசத்தின் அடுத்த கிடுக்கிப்பிடி வந்துகொண்டிருக்கிறது, மக்களே! வாழ்வாதாரம், அபிவிருத்தி, குந்த இடம், தொழில், படிப்பு என்று அற்ப விஷயங்களுக்கு ஏமாந்து விடாதீர்கள்" என்று அறைகூவப் போகிறார்கள். நரம்புகள் முறுக்கேறக் காத்திருப்போம்.

- ஆசிரியர்.

# கூட்டமைப்பு எம்.பி.க்களை உடனடியாக கைது செய்யுங்கள்

## ஹெல உறுமய ஆவேசம்

அரசியல் பேச்சுவார்த்தைகளைக் கைவிட்டு அரசாங்கம் உடனடியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரைக் கைது செய்ய வேண்டும். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கோரிக்கைவிடுத்துள்ளது.

உள்நாட்டில் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகளை நடத்துவது போன்று பாசாங்கு செய்துவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களையும் பரப்பி விட்டு அதோடு நிற்காமல் தமிழீழத்திற்கு ஆதரவாக பிரசாரங்களைச் செய்யும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை உடனடியாக அரசாங்கம் கைது செய்ய வேண்டும்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முக்கிய பிரமுகரும், ஊடகப் பேச்சாளருமான நிசாந்த தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். அங்கு அவர்கள் நிதிசேகரிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர்.

முன்னர் புலிகள் வெளிநாடுகளில் நிதி சேகரிப்பைச் செய்து நாட்டுக்குள் பல சேதங்களை விளைவித்தனர். அவர்களின் ஆயுதப் பிரிவினை தற்போது முடிவிற்கு வந்துள்ளது.

தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அரசியல் பிரிவினையை ஏற்படுத்த முயலுகின்றனர். அவர்கள் கூட வெளிநாடுகளில் நிதியைத் திரட்டி வந்து இங்கு அரசாங்கத்திற்கு எதிரான ஒரு அரசியல் போராட்டத்தை நடத்த முயலுகின்றனர்.

தங்களிடம் உள்ள நிதிப்பலத்தால் அவர்கள் தமிழ் மக்களை பிழையான வழியில் இட்டுச் செல்லவுள்ளார்கள். இதை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

# பிரமுகர்களின் பாதுகாப்பு புதிய நடைமுறை அமுல்

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட முக்கியஸ்தர்கள் அனைவரினதும் பாதுகாப்புக் கடமைகள் அனைத்தும் பொலிஸ் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இது தொடர்பான அறிவித்தல் ஒன்றை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க விடுத்துள்ளார். இதன்படி முக்கியஸ்தர்களின் பாதுகாப்புக்காக செல்லும் போது பொலிஸாரைத் தவிர ஏனையவர்கள் ஆயுதங்கள் வைத்திருக்க முடியாது என்று ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இதற்கான பணிப்புரையை பொலிஸ் பரிசோதகர்களுக்கு விடுத்துள்ளார்.

முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு கடமைகளின் போது பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கட்டாயம் கடமையில் இருக்கவேண்டும்.

அவர்கள் பொலிஸாரை தவிர வெளியார் எவரும் குறித்த பாதுகாப்புக் கடமையின் போது ஆயுதங்களை வைத்திருக்கிறாரா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று லலித் வீரதுங்க பணித்துள்ளார்.

இதுவரை காலமும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவுகள் பொலிஸாரின் கீழ் இடம் பெறவில்லை. புதிய நடைமுறையின்படி அவையும் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் தற்போது கொண்டு வரப்படுகின்றன.

## மீனவர்கள் 14 பேர் நேற்று விடுதலை

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 மீனவர்கள் நேற்றைய தினம் நாடு திரும்பியுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவிக்கிறது.

இந்த மீனவர்களுடன் இந்திய அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டிருந்த 6 மீனவப் படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கைப்பற்றப்பட்ட 6 மீனவப் படகுகளும் ஆந்திராவில் இருந்து நேற்று நாட்டிற்கு எடுத்துவரப்பட்டதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் லால் டி சில்வா தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட படகுகளில் சென்றிருந்த மீனவர்கள் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தப் படகுகளை எடுத்து வருவதற்காக தலா இரண்டு மீனவர்கள் வீதம் இந்தியா சென்றதாகவும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் லால் டி சில்வா மேலும் தெரிவிக்கிறார்.

## அரங்கியலும் சினிமாவும் விசேட பயிற்சிப் பட்டறை

யாழ்.பாடசாலை மாணவர்களுக்கான நாடகம் மற்றும் சினிமாவுக்கான பயிற்சிப்பட்டறை நிகழ்வு ஒன்று இந்தியக் கலைஞர்களால் நேற்று நாவலர் மணிமண்டபத்தில் நடாத்தப்பட்டது.

சிங்கப்பூர் நடிகர் புரவலர், டைரக்டர் ஜி.செல்வா, காதல் மன்னர் புகழ் இந்திய நடிகை மாணு உட்பட இந்தியக் கலைஞர்கள் இப்பயிற்சிப்பட்டறை நிகழ்வை நடத்தினர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகிய இப்பயிற்சிப் பட்டறை நிகழவில் பாடசாலை மாணவ மாணவியர் பெருமளவில் பங்குபற்றினர். இதன்போது இந்தியக் கலைஞர்களால் மாணவ மாணவியருக்கு சினிமா, நாடகத்துறை சம்பந்தமான பல்வேறு நுட்பங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டதுடன் அவை குறித்த பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

நேற்றுக் காலை யாழ். வந்து சேர்ந்த மேற்படி இந்தியக் கலைஞர்கள் சில நாட்கள் யாழ். நகரில் தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளத் திட்டமிட்டிருப்பதாக தெரிய வருகின்றது. அத்துடன் இக்குழுவினர் பங்குகொள்ளும் கலாசார நிகழ்வு ஒன்று நாளை பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

# துமிந்தவுக்கு சட்ட சலுகையா?

# மனித உரிமை அமைப்பு குமுறல்

(கொழும்பு)

முல்லேரியாச் சம்பவத்தில் காயமடைந்த துமிந்த சில்வாவுக்கு சட்டத்தில் விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் இது இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளதாக ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சாதாரண சூழ்நிலைகளில் படுகொலைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேக நபர் எந்த நிலையில் இருந்தாலும் அவரை தடுப்புக் காவலில் வைப்பதே வழமையாகும்.

இவ்வாறானவர்களை நீதவானின் அனுமதியுடன் மட்டுமே வெளிநாட்டு சிகிச்சைகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுவது வழக்கம்.

உயர் மட்டத்தினரின் உத்தியோகப் பற்றற்ற உத்தரவுகளின் முன்னிலையில் இலங்கையின் தற்போதைய நீதிமன்றக் கட்டமைப்பும் குற்ற விசாரணைப் பிரிவும் நிர்க்கதியான நிலையில் காணப்படுகின்றது என ஆசிய மனித உரிமை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

அதேவேளை துமிந்த சில்வாவிற்கு சட்டச் சலுகைகள் வழங்கப்படுவதாக மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருனிகா பிரேமசந்திர குற்றஞ் சுமத்தியுள்ளார். நீதவானின் அனுமதியின்றி சந்தேக நபர் ஒருவரை எவ்வாறு வெளிநாட்டு சிகிச்சைக்காக அனுப்பி வைக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## இலங்கையின் மனித உரிமை விவகாரம் - மலேசிய அரசாங்கம் தலையிடாது

இலங்கையின் மனித உரிமை விவகாரம் மற்றும் உள்விவகாரங்களில் மலேசியா தலையீடு செய்யாது என அந்நாட்டு பிரதி வெளி விவகார அமைச்சர் கோஹிலன் பிள்ளை தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல் குறிப்பாக மற்றும் போர்க் குற்றம் உள்ளிட்ட இலங்கையின் உள்விவகாரங்களில் மலேசியா தலையீடு செய்யாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, பொருளாதாரம், முதலீடு, மனித மூலதனம் உள்ளிட்ட விடயங்களில் இலங்கையுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண உத்தேசிப்பதாகத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற விவாதமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று திபெத் தொடர்பான விவகாரங்களிலும் தலையீடு செய்யப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வடமாகாண கூட்டுறவுக் கண்காட்சியில் 33 சங்கங்கள் சிறந்தவையாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் ஏற்பாட்டில் அண்மையில் கைதடியில் இடம்பெற்ற வடமாகாண கூட்டுறவு நிறுவனங்கள் கலந்து கொண்ட கண்காட்சியில் 33 கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த சங்கங்களாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து சிறந்த கூட்டுறவு சங்கங்களாகத் தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள் என்பவற்றின் பெயர் விபரம் வருமாறு:

**யாழ். மாவட்டம்:**

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், அச்சுவேலி பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வலி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், காரைநகர் அம்பன் மீனவர் கூட்டுறவுச் சங்கம், வேம்படி மகளிர் கல்லூரி கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி பிரதேச செயலக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், சதாவதானி கதிர்வேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம்.

**கிளிநொச்சி மாவட்டம்:**

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், இரணைதீவு இரணைமாதாநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், திருவையாறு படித்த இளைஞர் கூட்டுறவுச் சங்கம், கரைச்சி தெற்கு ஸ்ரீமுருகன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

**முல்லைத்தீவு மாவட்டம்:**

ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம், பாண்டியன்குளம் துணுக்காய் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், முள்ளியவளை காட்டு விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

**வவுனியா மாவட்டம்**

வவுனியா பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுறச் சங்கம், வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வவுனியா விபுலானந்தர் கல்லூரி கூட்டுறவுச் சங்கம், வவுனியா கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கற்குளம் பழனிமுருகன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், வவுனியா மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

**மன்னார் மாவட்டம்**

மாந்தை மேற்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், தாழ்வுபாடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி கூட்டுறவுச் சங்கம், மன்னார் மாந்தை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களுக்கான கடனுதவு கூட்டுறவுச் சங்கம், மன்னார் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

## வினாடி வினாப்போட்டி

(பருத்தித்துறை)

வடமாகாண விசேட புதிர் வினாடி வினாப் போட்டி 2011-2012 யாவும் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. வடமராட்சி வலயத்திற்குட்பட்ட கோட்ட மட்டப் போட்டிகள் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறுமென வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (உ-109)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தின் ஏற் பாட்டில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரணையுடன் நடத்தப்படும் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர் வரும் 7ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆசிரியர்களை இக கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளு மாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## வங்கிச் சேவையை நீடிக்குமாறு ஜெயபுரம் மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேசத்திற்குட்பட்ட ஜெயபுரம் நாச்சிக்குடா பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையின் சேவைகள் திருப்திகரமானதாக இல்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வங்கிச் சேவைகள் திங்கள் முதல் வெள்ளிவரை காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணி வரை செயற்படுவதாகவும், இச்செயற்பாட்டால் அப்பகுதி மக்கள் தமது தேவையை உரிய முறையில் பெற முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி மக்களில் அதிகளவானோர் கடற்றொழிலை மேற்கொள்வதால் கடன்களை பெற்றுக்கொள் வதற்கும் இதர தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏதுவாக வங்கியின் பணி நாளை அல்லது நேரத்தை நீடித்து தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (உ-77)

## சித்திரப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

பன்மைத்துவ கலாசார ஊடாக சமாதானம் என்னும் தொனிப்பொருளின் கீழ் வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

**பருத்தித்துறை**

பிரிவு I : கே. ஜெயதுஷாயினி (தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி), பி. அக்ஷயா (மேலைப் புலோலி சிவப்பிரகாச மகா வித்தி), கே. டிறோஜன் (கலட்டி ஆர்.சி.ரி.எம்.எஸ்) பிரிவு II : கே. ஜதுகோபி (தும்பளை சிவப்பிர காச மகா வித்தி), வி.ஞ. அன்ரனி சாள்ஸ் (பொலி கண்டி ஏச்.ரி.எம்.எஸ்), எஸ். கௌரீசன் (ஹாட்லிக் கல்லூரி)

பிரிவு III : எஸ். அஜந்தன் (பொலிகண்டி ஏச்.ரி.எம்.எஸ்), பி. மேனன் (தொண்டமானாறு வி.எம்.வி.), எஸ். செந்தூரன் (ஹாட்லிக் கல்லூரி)

பிரிவு IV : வை. பகீரதன் (ஹாட்லிக் கல்லூரி), எவ். ஏ. டினேஸ் (தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி), எல். செந்தூரன் (புலோலி மகா வித்தி)

பிரிவு V: ஜெ. நிரூபன் (ஹாட்லிக் கல்லூரி),வை. சிவரூபி (புற்றளை மகா வித்தி), கே. சுஜீவன் (தொண்டைமானாறு வி.எம்.சி).

**கரவெட்டி**

பிரிவு I : ஆர். சங்கவி (நெல்லியடி எம்.எம்.ரி.எம்.எஸ்), பி. இந்து (கரணவாய் மனியந்தோட்டம் ஜி.ரி.எம்.எஸ்), கே. துளசிகா (துன்னாலை காசிநாதன் வித்தி).

பிரிவு II : ஆர். ஆர்த்திகா (வட மத்தி மகளிர் கல்லூரி), ஏ.ஜெ. அன்ரனி சாய்மன் (வதிரி இருதயக்கல்லூரி), கே. கேகஜன் (உடுப்பிட்டி எ.எம். கல்லூரி) பிரிவு III: எஸ் கோபிகா (வட மத்திய மகளிர கல் லூரி), வை. லக்ஷன் (நெல்லியடி மத்திய மகா வித்தி), பி. பிரேம்நாத் (வதிரி இருதயக் கல்லூரி)

பிரிவு IV : கே. சிவதுஷன் (கரணவாய் [illegible] வித்தி), ரி. தினேஸ் (நெல்லியடி மத்திய மகா வித்தி), ஆர். ஐஸ்வர்யா (வடமத்திய மகளிர் கல்லூரி) பிரிவு V: எம். அபிராம் (நெல்லியடி மத்திய மகா வித்தி), ஜெ. லாவண்யா (உடுப் பிட்டி ஏ.எம்.சி.), எஸ். சரண்யா (தேவரையாளி இந்துக் கல்லூரி)

**மருதங்கேணி**

பிரிவு I : என். அருள்நிலா (மருதங்கேணி ஏச்.ரி.எம். எஸ்), ஜெ. லாவண்யா (தழையடி ஆர்.சி.ரி.எம்.எஸ்), எஸ். சரண்யா (உடுத்துறை மகா வித்தி).

பிரிவு II: கே. சசிதரன் (மருதங்கேணி ஏச்.ரி.எம்.எஸ்.), கே. டினுஷா (மணற்காடு ஆர்.சி.ரி.எம்.எஸ்), ரி. சுகிதா (தழையடி ஆர்.சி.ரி.எம்.எஸ்).

பிரிவு III: எஸ். கஜநாத் (மருதங்கேணி ஏச்.ரி.எம்.எஸ்), ஏ. டிதர்ஷன் (தழையடி ஆர்.சி.ரி.எம்.எஸ்), என். மிதுஷன் (குடத்தனை கரையூர் ஏ.எம்.ரி.எம்.எஸ்) பிரிவு IV : ஏ. பிரசாந்தன் (மணற்காடு ஆர்.சி.ரி. எம்.எஸ்), ஜெ. ஜெயதர்ஷன் (தழையடி ஆர்.சி.), ஆர். சதீஸ் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி.) (உ.109)

## கருத்தாடல் நிகழ்வு

(வவுனியா)

வன்னி இராட்சியத்தின் இறுதி மன்னனாகக் கருதப்படும் பண்டார வன்னியனின் வரலாற்றுப் பார்வை கருத்தாடல் நிகழ்வொன்று எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் ஐயாத்துரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பண்டாரவன்னியன் தொடர்பில் வரலாற்று ரீதியாக தகவல்களை அறிந்து கொள்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இக்கருத்தாடலில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் வரலாற்று நூலாசிரியருமான. அருணா செல்லத்துரை பண்டார வன்னியன் தொடர்பில் கருத்துக்களை முன்வைக்கவுள்ளார். (20)

## வெள்ளத்தினால் அவலப்படும் அரியாலை கிராம மக்கள்

(அரியாலை)

நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் அண்மையில் பெய்த கன மழையினால் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் மழை வெள்ளம் வீடுகளுக்குள் உட்புகுந்துள்ள நிலையில் மாற்று வழிகள் இன்றி இம்மக்கள் அந்த வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்களுக்கென இராணுவத்தினரால் அமைத்துக்கொடுக்கப்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், இந்திய வீட்டுத் திட்டத்தினூடாக கட்டப்படுகின்ற வீடுகளும் இதுவரை பூர்த்தியாக்கப்படாத நிலையில் இருப்பதாகவும் இக்கிராம மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.




வெள்ளநீர் சுற்றுப்புறச் சூழலிலும் வயல் நிலங்களிலும் தேங்கி நிற்பதால் போக்கு வரத்துக்கள் மேற்கொள்ள முடியாது இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வெள்ள நீர் தேங்கி நிற்பதால் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் டெங்கு நுளம்பின் தாக்கமும் அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதனால் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் முதியோர் பல்வேறு சிரமங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர். (எஸ்)

## செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பத்துப் பாடசாலைகளுக்குமான துரித கற்றல் செயற்றிட்ட செயலமர்வுக்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அனைவரையும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ-109)

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திய 89ஆவது கூட்டுறவு தின விழாவின் பரிசளிப்பு நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் பணியாளர் ஒருவருக்கு விருது வழங்குவதையும் காணலாம்.

# செட்டி புலத்துக்கு மின்சாரம் எப்போது கிடைக்கும் என்று ஏக்கம்

## மீள்குடியேறிய மக்களின் அவலம்

(வேலணை)

தீவகத்தில் ஏற்கனவே இடம்பெற்றிருந்த அசாதாரண சூழ்நிலைகளால் இடம்பெயர்ந்து சென்று விட்டு மீளக்குடியேற்றப்பட்டுள்ள செட்டிபுலத்தில் உள்ள மீனவக்குடும்பங்களினது ஒரு பகுதி மக்கள் குடியேற்றப்பட்ட இடத்திற்கு இதுவரை மின்சார விநியோகங்கள் எதுவுமே செய்யப்பட்டவில்லை என்று மீள்குடியேற்றப்பட்ட செட்டிபுல வாழ்மக்கள் தெரிவிக்கின்றனர். தாங்கள் தினமும் இரவு நேரத்தினை களிப்பதற்காக குத்து விளக்கினது வெளிச்சத்தையும் மண்ணெண்ணெயில் எரிகிற குப்பி விளக்குகளினது வெளிச்சத்துடனேயே



இரவில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் கூறுகின்றனர்.

பல தடவைகள் வேலணை பிரதேச செயலருக்கும் நாடாளு மன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் மற்றும் மின் சார சபையினது அதிகாரிகளுக்கும் பல முறை முறைபாடுகளை, தெரிவித்தும் இதுவரை எதுவித செயற்பாடுகளும் நடைபெறவில்லையென மீள் குடியேற்றப்பட்ட செட்டிபுல வாழ் மக்கள் புகாரகளை தெரிவித்துள்ளனர். (5)



கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் புலமைப் பரிசிலில் சித்தியடைந்த நடேசலிங்கம் தமிழினி 161 புள்ளிகள் பெற்று மாவட்ட மட்டத்தில் 51ஆவது நிலையை பெற்றுள்ளார்., அம்மாணவியுடன் அப் பாடசாலையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ள 07 மாணவர்களும் ஆசிரியர் ம.பிரதீபன் மற்றும் பிரதி அதிபர் திருமதி சகாயமலர் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (77)

# வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையின் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை நடாத்தும் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை பர்வதவர்த்தினி கலா மண்டபத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். மக்கள் வங்கி பிராந்திய அலுவலக அலுவலர் மு.சிவநேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

பிரதேச சபை இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும். வேலாயுதம் மகா வித்தியாலய சங்கீத ஆசிரியை செல்வி யோ.யோகாஞ்சனாவின் இசைக் கச்சேரியும், தொண்டமானாறு ஜெயபரத ஷேத்திரா மாணவர்களின் குறவன், குறத்தி நடனமும் ந.சஞ்சீவனின் வீணை இசையும், பொலிகை தில்லை சிவலிங்கம் குழுவினரின் கரகாட்டமும், தொண்டமானாறு அபிநய சுரபி கலாமன்றத்தின் நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளது. (உ-109)

# வழிகாட்டல் செயலமர்வும் குழுநிலை மேற்பார்வையும்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைச் செயலமர்வும் குழுநிலை மேற்பார்வையும் எதிர்வரும் 9,10ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் 5.30 மணிவரை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மாகாணதேசிய மட்ட வேலைத் திட்டங்கள் பற்றியும், தற்போது மாணவரைக் கையாழ்தல் தொடர்பான புதிய அணுகுமுறை பற்றியும் கலந்துரையாடப் படவிருப்பதால் பொறுப்பான ஆசிரியரைத் தவறாது பங்குபற்றச் செய்யுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வ ராசா அறிவித்துள்ளார். (உ-109)

# நிறுவுனர் தினமும் பரிசில் வழங்கலும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் நிறுவுனர் தினமும், சஞ்சிகை வெளியீடும், பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் த.திரவியராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிபபாளர் சி.நந்தகுமார் சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொள்ள வுள்ளனர். (உ.109)

# அத்திபாரம் இடும் ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக்கட்டடத்திற்கான அத்திபாரம் இடும் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.15 மணியளவில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் திருப்பணிக்குழுத்தலைவர் சூ.பாலசிங்கம் மற்றும் குழுவின் ஏனைய அங்கத்தவர்கள் முன்னிலையில் அகில இலங்கை இந்துமாமன்ற தலைவர் வி.கயிலாசபிள்ளை தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ)

# பரிசளிப்பு விழா

(நெல்லியடி)

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையிலான நூலகப் போட்டியில் கல்வி வலயங்கள் ரீதியாக வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், பாடசாலை மட்டத்தில் முதல் 3 இடங்களையும் பெற்ற போட்டியாளர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும். வடமாகாண முறைசாரா கல்விப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கமல்ராஜ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மேகநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (12)

# கலந்துரையாடல்

(குருநகர்)

எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். ஆனைக்கோட்டை புனித அன்னம்மாள் றோ.க.த.க.பாடசாலையில் வன்முறையற்ற தொடர்பாடல் சம்பந்தமான பயிற்சிக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

யாழ். சமாதான மற்றும் நல்லிணக்க நிலையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற மேற்படி கருத்தரங்கு அன்றைய தினம் நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணி வரை இடம்பெறும்.

தரம் 11 மாணவ, மாணவிகளுக்கு நிலையப் பணியாளர்கள் கலந்துரையாடலை நடத்தவிருப்பதாக வும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் செல்வி நிரஞ்சினி காஸ்மீர் தெரிவித்துள்ளார். (68)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(05.11.2011–சனிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஐப்பசி 19 ஆம் நாள்.
இராகுகாலம் 9.04-10.34, சுபநேரம் 3.04 -4.34வரை
நட்சத்திரம்: சதயம் மு.இ . 8.09 வரை
திதி: தசமி பி.ப. 5.04 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– காசுக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, வீண் கோபம், திடீர்ப் பயணம், உடம்பு நற்சுகம்.

ரிஷபம:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், உறவே பகை, பிணக்குத் தீர்தல், இனசன அழைப்பு.

மிதுனம் :–பணக் கஷ்டம், வீண் அலைச்சல், மனக்கவலை, குடும்பத்தில் கவலை, சுபகாரியப்பேச்சு, உற்சாகம்.

கடகம்:– குடும்பத்தில் கவலை, காசு வரும், வசதிக்குறைவு, வீண் கோபம், உடல் உபாதை.

சிம்மம்:– காசுக்கஷ்டம், உடல் சோர்வு, கடுஞ்சினம், புதியபொருள் சேர்க்கை, முக்கிய குடுப்பனவு.

கனனி :– கண்பார்வை மங்குதல், காசுவரும், வீணான கோபம், வசதிக்குறைவு, உடல் பலவீனம்.

துலாம் :–காசுக்கஷ்டம், உடம்பு சேர்வு, உறவினர் வரவேற்பு, வீண் கோபம், மனசஞ்சலம்.


விருச்சிகம்:– குடும்பத்தில் சேர்வு, காசுவரும், மனக்குறை, தேவையற்ற பயணம், வீண்கோபம்.

தனுசு:– பணம் வரும் குடும்பத்தில் கவலை, வீண் அலைச்சல் சுற்றத்தார் பகை, உடல் நல்ல சுகம்.

மகரம:– குடும்பத்தில் குழப்பம், பணக்கஷ்டம், நண்பர்களால் தொல்லை, வீண் சினம், உடல் உபாதை.

கும்பம் :– பணம்வரும், குடும்பத்தில் குதூகலம், குரு ஆசீர்வாதம், நல்ல சுகம், மனமகிழ்ச்சி.

மீனம் :– குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், தேவையற்ற பயணம் வசதிக்குறைவு, உடல் உபாதை.



## பரமர் சங்கமம்

''எங்கெங்கு காணினும் சக்தியடா'' இப்படிப் பாடி, மகாகவி சுப்பிரமணிய பாரதி நூறாண்டுகளை நெருக்கியோ விஞ்சியோ இருக்கலாம்.

இப்பொழுது நாங்கள் எங்கெங்கு போனாலும் பெண்களின் ஆக்கிரமிப்பே அதிகரித்து இருப்பதைக் காண்கிறோம். உதாரணத்திற்கு கடைத்தெரு, சந்தைப் பகுதி என்று எங்கு பார்த்தாலும், பெண்கள் கூட்டமே நிரம்பி வழிகிறது.

அதற்கு நடந்து முடிந்துள்ள யுத்தமும் ஒரு காரணமாக இருக்கலாம். அதிலும் அவர்களின் பங்கைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

அது போக நான் சொல்ல வருவதென்னெண்டா வேலை பார்க்கும் பெண்களும் இன்று அதிகரித்துத்தான் உள்ளனர். புடவைக்கடைகள் தொலைபேசி நிலையங்கள் மட்டுமா?

இரத்தம், சலம் சோதனை செய்யும் ஆய்வு கூடங்கள், பாமசிகள் பத்திரிகைக் கந்தோர்கள் இப்படி எங்கு பார்த்தாலும் பெண்கள் வியாபித்து இருப்பதை எங்களின் கண்கள் ஊடாகக் காண்கிறோம்.

அத்துடன் வடபகுதியை எடுத்துக் கொண்டால் அரச உயர் அதிகாரிகளாகப் பெண்களே வலம் வருகிறார்கள். அரச அதிபர், உதவி அரச அதிபர், மேலதிக அரச அதிபர் என்றில்லாமல் யாழ். போதனாவைத்தியசாலை பணிப்பாளர், மாநகரசபை முதல்வர் முதற்கொண்டு பெண்களே பதவிகள் வகிக்கிறார்கள்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் இப்படிப் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படவும் இல்லை. கல்வி பெறவும் அனுமதிக்கப்படவில்லை ஏன் பெண்கள் வீட்டை விட்டு வெளிக்கிடவும் அனுமதிக்கப்படவில்லை.

அதனாலேயே ''பெண்ணை வீட்டுக்குள் பூட்டிவைக்கும் மடமையைக் கொழுத்துவோம். '' என பெண்கள் விடுதலையைக் கோரி பாரதியார் முரசறையவும் ஏற்பட்டது.

வேலை பார்க்கும் பெண்கள் வீட்டதிகாரங்களைக் கொண்டு விளங்கும் இல்லங்களும் மேன்மையடைந்து வருவதை மறுப்பதற்கில்லை.

ஆண்களை விடவும் பெண்கள் கல்வியில் தற்காலத்தில் முன்னணியில் திகழ்வதையும் குறிப்பிடலாம்.

"ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை என்று கும்மியடி... சட்டங்கள் ஆளவும் திட்டங்கள் தீட்டவும் பெண்கள் துணிந்தனர். "என்று கும்மியடி..'' என்றும் பாரதியார் மலரப்போகும் பெண்கள் சமுதாய விடிவைப் பார்த்து தீர்க்க தரிசனமாகக் கூறிவைத்தார்.

இக் காலத்தில் பெண்ணியம 'என்ற கோட்பாட்டை வகுத்துப் பெண படைப்பாளிகள் கவிதை, கட்டுரை, கதைகள் ஆக்கிப் பெண்களின் அடிமைத்தளையை ஒழிக்கப் பாடுபட்டு வருவதையும் பரக்கக் காணலாம்.

ஆனால் ஆணும் இல்லாமல் பெண்ணும் இல்லாமல் 'ஞ இன்வன்' என்று வர்ணிக்கப்படுகின்ற அரவாணிகளான திருநங்கைகளின் வாழ்வியல் கேள்விக்குறியாக விட்டிருப்பது. சிந்திக்கத் தக்கதல்லவா?

'பெண்ணாகப் பிறந்திட மாதவம் செய்திடவேணும்' என்பது என்னவோ, இவ்விதம் இரண்டும் அற்ற பிறவிகள் நிலைபற்றி எதிர் காலம் என்னத்தைச் செய்யப்போகிறது.

# கிரீடா சக்தி வீர, வீராங்கனைகள் இனங்காணல் யாழ். மாவட்டத்தில் அதிகளவானோர் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

கிரீடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகளை இனங்காணும் நிகழ்வு நேற்று துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம் பெற்றது.

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதில் கால்பந்து, கரப்பந்து, கூடைப்பந்து, வலைப்பந்து, ஹொக்கி, கபடி போன்ற போட்டிகளிலிருந்து 14- 18 வயதிற்குட்பட்ட வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒவ்வொரு போட்டிக்கும் தலா ஐந்து பேர் வீதம் தெரிவு செயயப்பட்டு ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் பயிற்சி அளிக்கப்படும் என்று தேர்வாளர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து பாடசாலை வீர, வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிநிதி சமன் சமரக்கோன், தேசிய கரப்பந்தாட்ட பயிற்றுநர் அனுரா திசாநாயக்க, வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி. அண்ணாத்துறை, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி விஜயரூபசிங்கம் மற்றும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ்., வலிகாமம் பாடசாலை ஆசிரியர்கள், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, நேற்யைய தினம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வீர, வீராங்கனைகள் இனங்காணும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# யாழ்ப்பாணக் கல்லூரியில் வலய மட்ட கால்பந்தாட்டம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலய மட்ட கால்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த வலய மட்டப் போட்டி 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலேயே இடம்பெறவுள்ளது.

நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு போட்டிகள் இடம்பெறவுள்ளது.

இதில் 'ஏ' பிரிவில் வசாவிளான் மத்திய ம.வி., மாதகல் சென் ஜேம்ஸ், அராலி இந்து கல்லூரியும்,

'பி' பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, அராலி சரஸ்வதி வித்தியாலயம், புன்னாலைக் கட்டுவன் அ.த.க. பாடசாலையும்,

'சி' பிரிவில் ஸ்ரீமுருகன் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும்,

'டி' பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கட்டுவன்புலம் மகா வித்தியால்ய அணிகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, 16, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான வலய மட்டப் போட்டிகள் அடுத்த ஆண்டே இடம்பெறும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

## பயிற்சி முகாம்

(கிளிநொச்சி)

மாற்றுவலுவுள்ளோருக்கான இரண்டு நாள் கரப்பந்தாட்ட (சிற்றிங் வொலிகோல்) பயிற்சி முகாம் இன்றும், நாளையும் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் காட்சிப் போட்டிகள் காலை 8:00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரையும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர்கள் விளையாட்டு யாழ்.-இற்கு எட்டு இடங்கள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் மூவர் எட்டு இடங்களைப் பெற்றுள்ளனர்.

கல்வி அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி கடந்த வாரம் நுவரெலியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆகிய மூன்று பாடசாலை ஆசிரியர்களே பதக்கங்களை வென்றுள்ளனர்.



வாகீஸ்வரன்


அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியரான வாகீஸ்வரன் தட்டறிதலில் 25.11 மீற்றர் எறிந்து முதலாமிடத்தையும், ஈட்டி எறிதலில் 40. மீற்றர் எறிந்து இரண்டாமிடத்தையும், குண்டு எறிதலில் 9.77 மீற்றர் எறிந்து முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய ஆசிரியர் சி. திருமாளவன் உயரம் பாய்தலில் 1.65 மீற்றர் பாய்ந்து முதலாமிடத்தையும், நீளம் பாய்தலில் 5.90 மீற்றர் பாய்ந்து இரண்டாமிடத்தையும், முப்பாய்ச்சலில் 11.80 மீற்றர் பாய்ந்து முதலாமிடத்தையும் பெற்றுக் கொண்டார்.'

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி உடற்கல்வி ஆசிரியரான மேம்ஸ்யூட் நிரஞ்சன் தட்டெறிதலில் 23.46 மீற்றர் எறிந்து இரண்டாமிடத்தையும், குண்டெறிதலில் 9.48 மீற்றர் எறிந்து மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டார்.

இத்தொடரில் மேற்படி மூன்று ஆசிரியர்களாலும் எட்டு பதக்கங்கள் யாழ். மாவட்டத்திற்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் 16 வயதுப் பிரிவு கால்பந்து அணிக்கான காலணிகள் மற்றும் கிரிக்கெட் உபகரணங்களை நேற்றைய தினம் முத்துக்குமாரு அன்பளிப்பாக வழங்கினார்.

இந்நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், பிரான்ஸ் நாட்டு யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் இணைப்பாளருமான கே. முத்துக்குமாரு அவர்களின் அன்பளிப்பாக இப்பொருட்கள் வழ்ங்கப்பட்டது.


இவ் உபகரணங்கள் யாவும் மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தனிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்களாகிய சொ. விமலதாசன், எஸ். பிரேம்குமார், கிரிக்கெட் பயிற்றுநர் சுரேஸ்மோகன், விளையாட்டு பொறுப்பாசிரியர் எடிசன் ஆகியோர் உட்பட கால்பந்து வீரர்களும் கலந்து கொண்டனர். (07)





யாழ். மத்திய கல்லூரியினால் நடத்தப்பட்ட விபுலானந்தன் நினைவு வெற்றிக் கிண்ண கூடைப்பந்தாட்ட ஆண்களுக்கான போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ். மத்திய கல்லூரி அணித் தலைவர் விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதையும், அணி வீரர்களையும் காணலாம். இத்தொடரில் யாழ். இந்துக் கல்லூரி அணி சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (படம் : பா. சிகான்)

## இவானோவிச் வெற்றி



இந்தோனேசியாவின் நுசா டுயா நகரில் நடைபெற்று வரும் டபிள்யூ.டி.பி. ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் செர்பியாவின் அனா இவானோவிச் வெற்றிபெற்றார்.

இத்தாலியின் ராபர்ட்டா வின்ஸூடன் மோதின இவானோவிச் 6-3, 6-3 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார்.

சிறப்பான வெற்றியாக இதனைக் கொள்வதாகவும், தொடர்ந்து இடம் பெறும் போட்டிகளில் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றுவதே நோக்கம் என வெற்றியின் பின் இவானோவிச் தெரிவித்தார்.

## பாகிஸ்தானின் கறுப்பு நாள்

### முன்னாள் வீரர்கள் ஆதங்கம்

(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு மோசமான நாளான இந்த நாள் அமைந்துள்ளது. இதனை பாகிஸ்தான் கிரிக்கெட்டின் கறுப்பு நாளாகவே பார்கின்றோம் என்று பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

சூதாட்டத்தில் சிக்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது குறித்து முன்னாள் வீரர்கள் தெரிவித்த கருத்து வருமாறு:-

**லத்தீப்**

ஒரு பாகிஸ்தான் வீரர் என்ற முறையில் இந்தத் தீர்ப்பை எனது வாழ்க்கையில் மோசமானதாகக் கருதுகிறேன். ஆனால் இந்தத் தண்டனை அவர்களுக்கு சரியானது தான். இப்போது பாகிஸ்தான் அரசும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தத் தீர்ப்பு, எதிர்காலத்தில் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கும் என்று நம்புகிறேன். ஏனெனில் கிரிக்கெட்டில் யாரும் சூதாட்டத்தில் ஈடுபடுவதை அனுமதிக்கக் கூடாது.

**இம்ரான் கான்**

இன்று பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு அவமானமான நாள். இந்த வழக்கில் சிக்கிய முகமது ஆமீருக்காக மிகவும் வருந்துகிறேன். ஏனெனில் அவர் மிகவும் இளம் வீரர்.

**மொயின்கான்**

பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு இது ஒரு சோகமான நாள். ஆனால் இது பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு புதிய தொடக்கமாக அமையும் என்று நம்புகிறேன்.

**இன்திகாப் ஆலம்**

பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு இன்று கறுப்புத் தினம். இந்த வீரர்களுக்காக வருந்துகிறேன். ஆனால் அவர்கள் செய்த தவறுகளுக்குரிய பலனை அனுபவித்துத் தான் ஆக வேண்டும்.

**ஜகீர் அப்பாஸ்**

இந்த வழக்கால், நான் உட்பட அனைத்து பாகிஸ்தான் மக்களும் சந்தித்துள்ள தர்மசங்கடமான நாள். இது ஒரு கறுப்புத் தினம். ஸ்பொட் பிக்சிங் குற்றச்சாட்டுக்காக கிரிக்கெட் வீரர்கள் சிறைக்குப் போவார்கள் என்று யாரும் எதிர்பார்த்து இருக்கமாட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## மக்களிடம் மன்னிப்பு



(லண்டன்)


ஸ்பொட்பிக்சிங் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக பாகிஸ்தான் மக்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் என வேகப்பந்து வீச்சாளர் முகமது அமீர் தெரிவித்துள்ளார்.

உலகின் சிறந்த கிரிக்கெட் வீரராக உருவாக வேண்டும் என்பதே எனது கனவு. நான் மீண்டும் கிரிக்கெட் விளையாடுவேன் என்று ஒவ்வொருவரும் விரும்புவார்களா என்று தெரியவில்லை.

பாகிஸ்தானில் கிரிக்கெட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்த விளையாட்டில் நான் மிகப்பெரிய பாதிப்பை சபை ஊழல் தடுப்பு குறித்த நடத்தை விதிகளை என்னிடம் சரியாகத் தெரிவிக்கவில்லை. எனது நடவடிக்கைக்கு மீண்டும் ஒருமுறை வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இந்திய மண்ணில் சாதிக்க முற்படுவேன்

(புதுடில்லி)



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் சவாலானது. அதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன் என்று மேற்கிந்தியத் தீவு அணியின் சுழற்பந்து வீச்சாளர் பிஷோ தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் பங்கேற்க, மேற்கிந்தியத் தீவு அணி நேற்று முன்தினம் புதுடில்லி சென்றுள்ளது.

அங்கு நிருபர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே பிஷோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொதுவாக டெஸ்ட் போட்டிகளில் சுழல் பந்து வீச்சாளர்களுக்கு, கடைசி சில நாட்களில் தான் அதிக வேலை இருக்கும். இந்திய துணைக்கண்டத்து ஆடுகளங்களில், சுழல் பந்து வீச்சு அதிகமாக எடுபடும். இதனால், எனக்கு அதிக வேலை இருக்கும் என்பது தெரியும்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்டில், ஐந்தாவது நாளில் தான் அதிக வாய்ப்பு வரும் என்று தெரியும். இதற்குத் தேவையான அளவு பயிற்சி செய்து, இரண்டாவது இன்னிங்சில் ஐந்து விக்கெட் வீழ்த்தி, அணிக்கு வெற்றி தேடித்தந்தது மகிழ்ச்சியாக உள்ளது. தவிர, தொடரையும் வென்றுள்ளோம் என்பது அதிக உற்சாகத்தை தந்தது. அதேபோன்று இந்திய மண்ணிலும் சாதிக்க முற்படுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சார்ஜாவில் இலங்கை பலம்



(சார்ஜா)

பாகிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி சார்ஜாவில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இலங்கை அணி, அதன் முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 413 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்ககார 144, டில்சான் 92, மஹேல ஜெயவர்த்தன 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயீட் அஜ்மல் நான்கு, உமர்குல் மூன்று, ஜுனைட்கான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

இதேவேளை, இப்போட்டியில் 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை சங்ககார டெஸ்ட் அரங்கில் 9000 ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சிறப்பைப் பெற்றார். இலங்கை அணியில் 9000 ஓட்டங்களைக் கடந்தவர்களில் மஹேல ஜெயவர்த்தனவுக்கு அடுத்து சங்ககார உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேன்முறையீட்டுக்கு சல்மான்பட் முடிவு



(லண்டன்)

சூதாட்டப் புகார் தொடர்புடையதாகக் குற்றஞ்சாட்டி லண்டன் நீதிமன்றம் 30 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்ததை எதிர்த்து மேல்முறையீடு செய்யவிருப்பதாக பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சல்மான் பட் கூறியுள்ளார்.

தண்டனையை எதிர்த்து சல்மான் பட் மேல்முறையீடு செய்யப் பேவதாக அறிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவரது வழக்கறிஞர் பால் ஹாரிஸ், அடுத்த 24 மணி நேரத்தில் இந்த நடவடிக்கையைத் தொடங்குவோம் எனத் தெரிவித்தார்.

## இடைக்கால சபை கலைக்கப்படும்

### விளையாட்டுத்துறை அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட்டின் இடைக்கால நிர்வாக சபை நவம்பர் 14ஆம் திகதி கலைக்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் நடைபெறும் தேர்தலின் அடிப்படையில் புதிய நிர்வாகக் குழுவினர் நியமிக்கப்படுவர் எனவும் இடைக்கால நிர்வாக சபைச் செயற்பாடுகள் உரிய முறையில் நடைபெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்காலத்தில் இளம் வீரர்களை அணியில் உள்வாங்குவது குறித்தும், கிரிக்கெட்டிலிருந்து விலகிச் செல்லும் சாதனையாளர்களின் இடத்தை சரிவர நிரப்புவதன் மூலமே அணியை தொடர்ந்தும் ஒரு தரத்தில் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக சபை கலைக்கப்பட்டு, புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படுவது சிறந்த முடிவென விமசர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### 2018 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டு

## இலங்கையில் இடம்பெற முரளி அதிக பங்கு வகிப்பார்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை அம்பாந்தோட்டையில் நடத்தும் உரிமையைப் பெறுவதில் இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் முக்கிய பாத்திரம் வகிப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை அரசாங்கம் நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

இலங்கையின் அம்பாந்தோட்டை நகரமும் அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரமும் இவ்வுரிமையைப் பெறுவதற்குப் போட்டியிடுகின்றன. இது தொடர்பான பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத்தின் வாக்கெடுப்பு எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத்திற்கான தனது இறுதி விளக்கக்காட்சிக்காக அடுத்த வாரம் அவுஸ்ரேலியாவுக்குச் செல்லவுள்ள இலங்கைத் தூதுக்குழுவில் 2000 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் விஸ்டன் சஞ்சிகையினால் உலகின் முதன்மை கிரிக்கெட் வீரராக தரப்படுத்தப்பட்டவரான முத்தையா முரளிதரன் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுவதாக அம்பாந்தோட்டை 2018 ஏற்பாட்டுக்குழுவின் தலைவரான அஜித் நிவார்ட் கப்ரால் ஸின்ஹவா செய்திச் சேவையிடம் கூறினார்.

கிரிக்கெட்டின் இரு வகையான சர்வதேச போட்டிகளிலும் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவரான முரளிதரன் 1000 சர்வதேச விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரர். அவர் மற்றொரு முதல் நிகழ்வை - இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய போட்டியை- பெற்றுக் கொடுக்க முடியும் என நாம் நம்புகிறோம். இப்போட்டிகள் எமது ஐக்கியப்பட்ட நாட்டிற்கும் எமது மக்களுக்கும் அதிக



நன்மைகளை வழங்கக்கூடியது என அஜித் கப்ரால் கூறினார்.

800 டெஸ்ட் விக்கெட்டுகளையும் 534 ஒருநாள் சர்வதேச விக்கெட்டுகளையும் வீழ்த்திய முத்தையா முரளிதரன், இவ்வருட உலகக்கிண்ணப் போட்டிகளுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருநது ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# அழுத்தத்திலிருந்து அரசை விடுவிக்க ரஷ்யா தொடர்ந்தும் உதவி வழங்கும்

(கொழும்பு)

அனைத்து சர்வதேச அழுத்தங்களில் இருந்தும் இலங்கை அரசை விடுவித்துக் கொள்வதற்கு தொடர்ந்தும் உதவி வழங்குவதற்கு ரஷ்யா முன்வந்துள்ளது.

யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர இலங்கை அரசிற்கு எந்தளவிற்கு அர்ப்பணிப்புடன் ரஷ்யா உதவி ஒத்தாசைகளை வழங்கியதோ அதேபோன்று பொருளாதார அபிவிருத்திகளிலும் இலங்கையுடன் ரஷ்யா வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும் என்று இலங்கைக்கான ரஷயத் தூதுவர் விளாடிமிர் பி.மிகேலோ தெரிவித்துள்ளார்.

கடந்த பல ஆண்டு காலமாகவே ரஷ்யா மற்றும் இலங்கைக்கு இடையிலான நட்புறவு சிறந்தளவில் காணப்பட்டது. இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர நடவடிக்கைகளும் வரவேற்கப்பட வேண்டிய நிலையிலேயே இருந்தது.

எனவே இந்த உறவு மேலும் வலுப்பெற ரஷ்யா பரந்தளவில் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயற்படும் என்றும் அவர் தெவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரஷ்யத் தூதுவர் விளாடிமிர் பி.மிகேலோ மேற்கண்டவாறு கூறினார்.

இவர் இங்கு தொடர்ந்தும் கூறுகையில், இலங்கை அரசாங்கம் உள்நாட்டு பயங்கரவாத யுத்தத்தில் இக்கட்டான சூழ்நிலைகளை சந்தித்திருக்கையில் ரஷ்யா மிகவும் அர்ப்பணிப்புடன் உதவியிருந்தது. யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் வடக்கு மற்றும் கிழக்கிற்கான மனிதாபிமான நடவடிக்கைகளையும் வழங்கி வந்தது. எவ்வாறாயினும் இலங்கைக்கான உதவிகளிலோ இராஜதந்திர உறவிலோ எவ்விதமான மாற்றம் ஏற்படாமல் மேலும் வலுவான நிலையிலேயே உள்ளது.

தற்போது இலங்கை அரசாங்கம் எதிர்கொள்கின்ற சர்வதேச அழுத்தம் உட்பட அனைத்து பிரச்சினைகளிலும் இருந்து விடுபட ரஷ்யா உதவி செய்யும்.

குறிப்பாக நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி, வடக்கிற்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்தல் என்பவற்றில் முழு ஈடுபாட்டுடன் ரஷ்யா உதவும். மக்கள் மீள்குடியேற்றத்திற்கு சவாலாக அமைந்துள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்காக ரஷ்யா நவீன உபகரணங்களையும் வழங்கியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விளக்கமறியல் உத்தரவு



(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரை இலக்கு வைத்து கொழும்பில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை நவம்பர் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ண நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த இரகசிய அறிக்கை ஒன்றையடுத்து கொள்ளுப்பிட்டி பொலிஸார் இச்சம்வம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்தனர். எஸ்.சிவானந்தா எனும் மேற்படி சந்தேக நபர் குண்டுவெடிப்பு இடம்பெற்ற காலத்தில் போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நாட்டை விட்டு வெளியேறியதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இரண்டாயிரத்து நூறு குடும்பங்களே இன்னமும் மீள்குடியமர்த்தப்படவுள்ளன

## நடவடிக்கையை துரிதப்படுத்த ஏற்பாடு



(கொழும்பு)

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் இன்னமும் இரண்டாயிரத்து நூறு குடும்பங்களே மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

செட்டிக்குளம் ஆனந்த குமாரசுவாமி மற்றும் கதிர்காமர் நலன்புரி கிராமங்களில் இவர்கள் தற்போது தங்கியிருப்பதாக மீள்குடியேற்ற அமைச்சர் குணவர்தன வீரக்கோன் தெரிவிததுள்ளார்.

இந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் பொருட்டு கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக குறிப்பிட்ட அமைச்சர், அதுவரை இந்த மக்களை தங்கவைப்பதற்காக கொம்பாவில் பிரதேசத்தில் இராணுவத்தினரின் உதவியுடன் சுமார் 600 ஏக்கர் காணி துப்புரவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கொம்பாவில் பிரதேசத்தில் தலா 4 பேர் வீதம் ஆயிரம் காணித் துண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

எதிர்வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் சுமார் 200 குடும்பங்களை அந்த பிரதேசத்தில் மீள்குடியேற்றத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் மனிதாபிமான நடவடிக்கையின் மூலம் மீட்கப்பட்டு செட்டிக்குளம் நலன்புரிக் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள எஞ்சிய மக்களையும் மிக விரைவில் மீள்குடியேற்றவுள்ளதாகவும் அமைசசர் மேலும் குறிப்பிட்டார்.

# அனோமா பொன்சேகா மீது வழக்குத் தொடர ஏற்பாடு



(கொழும்பு)

ஆயுதக்கொள்வனவு மோசடி தொடர்பில் தேடப்பட்டு வந்த மருமகனான தனுன திலகரட்னவை, வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல உதவியதாக குற்றஞ்சாட்டி, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா மீது வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி அது தொடர்பான கோப்புகளை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் தற்போது கையளித்துள்ளனர்.

அத்துடன் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள தனுன திலகரட்ன தற்போது அமெரிக்காவில் வசித்து வருவதாக குற்றப்புலனாய்வுத் துறையினர் தமது அறிக்கையில் கூறியுள்ளனர்.


அதேவேளை, சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக்கொடி வழக்கின் தீர்ப்பு நவம்பர் 18ஆம் திகதி நீதிமன்றத்தினால் அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை ஆவலுடன் எதிர்பார்க்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

அரசினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையை தாம் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

இந்த மாதம் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து தாம் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.



இந்த அறிக்கை உயர் தரத்தைக் கொண்டதாக அமைந்திருக்குமெனவும் அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

இந்த அறிக்கையை தாம் சர்வதேச விதிமுறைகளுக்கு அமைய பரிசீலிக்க இருப்பதாகவும் அமெரிக்கா மேலும் கூறியுள்ளது.

# வலுவிழந்த சர்வதேச உறவுகளினை மீண்டும் பலப்படுத்தியமைக்கு பாராட்டு

(கொழும்பு)

வலுவிழந்து போயிருந்த சர்வதேச உறவுகளை மீண்டும் வலுப்படுத்தியமைக்காக ஜனாதிபதிக்கும் சில அமைச்சர்களுக்கும் அமைச்சரவை அமர்வின் போது பாராட்டுத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கு சில அமைச்சர்கள் மேற்கொண்ட முயற்சி பாராட்டுக்குரியது என்று அமைச்சரவை அவர்களுக்குப் புகழாரம் சூட்டியுள்ளது.



சில மேற்குலக நாடுகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க நடவடிக்கைளை உதாசீனம் செய்து வருவதாகவும், இலங்கை மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கிச் செல்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதியின் உரை மற்றும் சர்வதேச நாட்டுத் தலைவர்களுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளினால் இலங்கைக்கு பாரியளவு நன்மை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை தெரிவித்துள்ளது.

குறிப்பாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட சிலருக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராஜதந்திரிகளுக்கான சலுகைகள் சவேந்திர சில்வாவுக்கும் உண்டு

## அமெரிக்க நீதிமன்றில் மனு



(கொழும்பு)

ஐ.நா.வுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வாவுக்கு இராஜதந்திரிகளுக்கான சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்றும், அவருக்கு எதிரான வழக்கைத் தள்ளுபடி செய்யும்படியும் கோரி அமெரிக்க நீதிமன்றில் பதில் மனு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

தடை செய்யப்பட்ட புலிகள் அமைப்பின் உறுப்பினர்களது உறவினர்களால் சவேந்திர சில்வாவிற்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கை முற்றிலும் சட்டவிரோதமானது என சவேந்திராவின் சட்டத்தரணி திமோதி ஜீ.நெல்சன் தெரிவித்துள்ளார்.

வியன்னா பிரகடனத்தின் அடிப்படையில் சவேந்திராவிற்கு வழங்கப்பட வேண்டிய இராஜதந்திர சலுகைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் உதவி பாகிஸ்தானுக்கு

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கு வெள்ளப் பெருக்கு நிவாரணமாக இலங்கை ஒரு தொகை உதவிப் பொருட்களை வழங்கியுள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸினால் இந்தப் பொருட்கள் உத்தியோகபூர்வமாக இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேயிலை தூள், பிஸ்கட், படுக்கை விரிப்புகள், அப்பியாச கொப்பிகள், மற்றும் மருந்துப் பொருட்கள் என்பன இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பாகிஸ்தானின் சிந்து பிராந்தியத்தின் 21 மாவட்டங்களில் சுமார் 4 மில்லியன் மக்களுக்கும் அதிகமானவர்கள் பாதிப்படைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சொத்துக்கள் குவிந்தது எப்படி அனுருத்த ரத்வத்த விளக்கம்

(கொழும்பு)

சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தே நேரில் சாட்சியமளித்தார். சட்டத்திற்கு முரணான வகையில் ரத்வத்தே சொத்துக்களை குவித்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

நீதவான் சுனில் ராஜபக்ஷவின் முன்னிலையில் ஆஜரான ரத்வத்தே சொத்துக்கள் எவ்வாறு சம்பாதிக்கப்பட்டன என்பது குறித்து நீதிமன்றில் விளக்கமளித்துள்ளார். சொத்துக்கள் எவ்வாறு குவிக்கப்பட்டன என்பது குறித்து விசாரணை அதிகாரிகளுக்கு தாம் விளக்கமளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கணக்கு விபரங்கள் எதுவும் இன்றி சட்டவிரோதமான முறையில் அசையும் அசையாச் சொத்துக்களை முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தே குவித்துள்ளதாக குற்றம சுமத்தப்பட்டுள்ளது.

# வர்த்தகரின் மகன் மீது வத்தளையில் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

வத்தளை, கெரவலபிடியவில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 22 வயதுடைய வர்த்தகரின் மகன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறிப்பிட்ட இளைஞர் வீட்டில் இருந்த வேளையில், பஜீரோ வாகனமொன்றில் வந்த இனம்தெரியாத நபர்கள் இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த இளைஞன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை இரண்டு பொலிஸ் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய சொகுசு வாகனத்தைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். துப்பாக்கிப் பிரயோகத்திற்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

# அரச ஊழியர்களுக்கு வீட்டுத்திட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 25 ஆயிரம் ரூபா வருமானத்திற்கு உட்பட்ட வருமானம் பெறும் அரச ஊழியர்களுக்கும் அரசின் வீடமைப்புத் திட்டத்திற்கு உள்வாங்கப்பட புதிய திட்டமொன்றை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலமாக வருங்காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டிய 60 ஆயிரத்து 500 குடும்பங்களின் தேவையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் அவர்களுக்கு அரச வீடு பெற்றுக்கொடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதுவரை சுமார் 27 ஆயிரம் குடும்பங்கள் வரைக்குமான வீடுகளை அமைத்துக் கொடுக்கவே ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அரச அதிபர், அலவன்ஸ் மற்றும் பிரயாணப்படி அடங்கலாக 25 ஆயிரம் ரூபாவிற்கு உட்பட்ட வருமானம் பெறும் அரச ஊழியர்கள் இத்திட்டத்திற்குள் உள்வாங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

(பா)

## பதவி உயர்வு

(நீர்வேலி)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக (மாணவர் கல்வி அபிவிருத்தி) கடந்த புதன்கிழமை தொடக்கம் பதவியுயர்வு பெற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அத்தியார் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றி வரும் நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐ.பத்மநாதன் கடமையேற்பார் என்று தெரிய வருகிறது.

# வேலணையிலுள்ள வறிய குடும்பங்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

## பிரதேச சபையின் தவிசாளர் கோரிக்கை

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரச காணிகளைப் பகிர்ந்தளிக்கும்போது காணிகள் இல்லாத மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவசாயக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

தற்போது மழைகாலம் என்பதால் கடந்த காலத்தினைப் போன்று மக்கள் எதிர்கொண்ட இடர்நிலையைத் தவிர்த்து இனிவரும் காலங்களில் முன்னேற்றம் கொள்ளச் செய்ய வேண்டும். அத்துடன் மீள் எழுச்சித்திட்டத்தில் புங்குடுதீவில் உள்ள அடகாக்கும் குளம், முருகன் கோயில் குளம், பொற்களிக் குளம் மற்றும் மண்டைதீவு சம்புக்குளம் ஆகியவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைக்கப்படவுள்ளன என்று தெரிவித்தார்.

மேலும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேலணைப் பிரதேச செயலர் மு.நந்த கோபாலனிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை, இந்நிகழ்வல் தேசிய வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றி பெற்ற 7 வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள் மற்றும் பாடசாலைகளுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன.

மேற்படி சான்றிதழ்களை வேலணை தவிசாளருடன் இணைந்து உப தவிசாளர் மற்றும் வேலணைச் செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளரும் வழங்கினர்.

(85)

# அமெரிக்க அரசின் நிதியுதவியில் பூநகரியில் புதிய வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

பூநகரி வைத்தியசாலை அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.


பூநகரி வாடியடிப் பகுதியில் இதற்கென கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 15 ஏக்கர் காணியில் இந்த வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே பூநகரியில் அமைக்கப்பட்டிருந்த வைத்தியசாலை யுத்தத்தின்போது சேதமடைந்திருப்பதும் அது பழமையான கட்டடமாகவும் அமைந்திருப்பதன் காரணமாக வேறு இடத்தில் புதிதாக இந்த வைத்தியசாலையை நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டதாக அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற யாழ்-கிளிநொச்சி அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்குறித்த தகவல்களை வெளியட்டுள்ளார்.

பூநகரியில் யுத்தத்தின்போது சேதமடைந்த வைத்தியசாலையைப் புனரமைப்பது தொடர்பாகவும் வைத்திய சேவையை ஏற்படுத்துவது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

(பா)



தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள இருபது பாடசாலைகளிலுள்ள வறிய மாணவர்களுக்கு பிரான்ஸ் கார்ஸ் தமிழர் நலன்புரிச் சங்கத்தின் நிதியுதவியுடன் சப்பாத்துக்கள், பாடசாலைப் பைகள், துவிச்சக்கர வண்டிகள் மற்றும் சக்கர நாற்காலிகள் போன்றவற்றை மேற்படி சங்கத்தின் தலைவர் கு.முத்துக்குமாருவினால் கைதடி நுணாவில் அறவழி செயலகத்தில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (பா.சிகான்)

# இந்துக் குருமார் ஒன்றியம் எழுத்தாளர் பேரவை உதயம்



(யாழ்ப்பாணம்)

இந்துக் குருமார் ஒன்றிய குருத்துவ மரபு எழுத்தாளர் பேரவை ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் ஆனைப்பந்தியில் உள்ள இந்துக் குருமார் ஒன்றியத் தலைமைச் செயலகத்தில் இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர். சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த பிரதிப் பதிவாளர் நாயகம் பிரம்மஸ்ரீ.சதாசிவ ஐயர் இம்முயற்சியை விளக்கிச் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பல்வேறு இந்துக் குருத்துவ மரபு (அந்தண) எழுத்தாளர்களும் கலந்துகொண்டனர். இந்த எழுத்தாளர் பேரவை இந்துக் குருமார் ஒன்றியத்தோடு இணைந்து அதற்குச் சிறப்புச் சேர்க்கும் அமையமாகச் செயற்படும் என்று குறிப்பிடப்பட்டது.

இந்துக் குரு மரபுக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களையும், யுவதிகளையும் எழுத்துத் துறையில் ஊக்குவிக்கும் முயற்சியாக இப் பேரவையின் அங்குரார்ப்பணம் அமையும் என்று குறிப்பிடப்பட்டது.

இந்தப் பேரவையை வழிநடத்தும் முகமாக ஐவர் கொண்ட மூத்த எழுத்தாளர் அணி உருவாக்கப்பட்டது. கலைச் செல்வி இதழளார் பிரம்மஸ்ரீ சிவசரவணபவன் (சிற்பி) அவர்களின் தலைமையில் இயங்கும் இந்த மூத்த எழுத்தாளர் அணியில் கோப்பாய் வீரபத்திரஸ்வாமி ஆலய பிரதம குரு சோ.பிரணதார்த்திஹரக் குருக்கள், 'நீர்வைமணி' கு.தியாகராஜக் குருக்கள், உடுவில் பிரதேச சபை நூலகர் ஸ்ரீ.சௌந்தரராஜன், பிரபல உளவளத் துணை எழுத்தாளர் சந்திரசேகரசர்மா ஆகியோர் உள்ளடங்கப்பட்டுள்ளனர்.

# மண்டைதீவு வைத்தியசாலை புனரமைப்புச் செய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வைத்தியசாலை அடுத்த ஆண்டில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியின் பின்னர் செயலிழந்து போயிருந்த இந்த வைத்தியசாலை தொடர்ந்தும் நிலவிய யுத்தகால சூழ்நிலைகளால் முற்றாக அழிவடைந்து போயுள்ளது.

நாட்டில் யுத்தம் நிறைவடைந்து மக்கள் இக்கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந் திருந்த போதும் அப்பகுதி வைத்தியசாலை புனரமைக்கப்படாது, அங்கு வாழ்ந்து வரும் மக்கள் வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், மெவிமலேவிய நிறுவனம், குடும்ப புனர்வாழ்வு நிறுவனம் போன்றவற்றின் குறிப்பிட்ட ஒரு சில நாட்கள் மட்டும் நடமாடும் மருத்துவ சேவை மட்டுமே மாதத்தில் இம்மக்களுக்கு கிடைத்து வருகிறது. மேலதிக மருத்துவ தேவைக்கு யாழ்.போதனா வைத்தியசாலையையே நாடவேண்டியுள்ளது. இந்நிலையில் அப்பகுதி மக்களின் மருத்துவ சேவையின் மேம்படுத்த பல்வேறு மட்டங்களிலும் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இவ் வைத்தியசாலை புனரமைக்கப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே யாழ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இத்தகவலைத் தெரிவித்தார்.

(பா)


## முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுச் சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுச்சபைக் கூட்டம் டிசம்பர் 10ஆம் திகதி நடைபெறும். ஞாயிறு மாலை யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் செயலாளர் அஷ்சேக் ஐ.அஸ்மின், எம்.யு.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மீள்குடியேற்றத்திலுள்ள தடைகள், வீட்டுத்தோட்ட நடைமுறைகள், வாக்குரிமையை தயார்ப்படுத்தல், யாப்பு அங்கீகாரம் மற்றும் தலைவர் தெரிவு சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. அத்துடன் சம்மேளனத்தல் ஒருவருட பூர்த்தியும் அதன் பொதுக் கூட்டமும் டிசம்பர் 10ஆம் திகதி நடத்தப்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.(105)


# குவர்னிக்கா போரின் கொடுமை பற்றிய அனைத்துலகத் தோற்றம்



பிக்காஸோவின் இந்த ஓவியத்தை முழுமையாகக் காணும் பொழுது, இதனை இருபதாம் நூற்றாண்டு மனிதனின் உருவமாகவே நான் காண்கின்றேன். ஏனென்றால், இது மனித குலத்தின் பல்வேறு பாணிகளையும் பருவங்களையும் தழுவி நிற்கின்றது. தங்களது சமயம், வாழ்க்கை முறை, சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், மொழி, நிறம், பண்பியல்கள் அனைத்தாலும் முற்றிலும் மாறுபட்டுள்ள வேறு மக்களும் உலகில் வாழ்கின்றார்கள் என்பதை இன்றைய உலக மக்கள் நன்கு ணர்ந்திருக்கிறார்கள். இத்தகைய வேற்றுமையிலிருந்து எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இரண்டு வழிகள் தாம் உண்டு. "நான் செய்வதுதான் சரி மற்றவர்கள் செய்வதெல்லாம் தவறு" என்று ஒவ்வொரு மனிதனும் நினைத்தால், தீராத பூசல்கள்தாம் மிஞ்சும். "மற்றவர்களின் வாழ்க்கை முறையும் நம்முடையதைப் போல் சிறந்தது தான். நாமும் வேறிடத்தில் வேறு சூழ்நிலைகளில் பிறந் திருந்தால், நாம் பகைவர்களாகக் கருதுகின்ற அப்பகுதி மக்களின் மனப்பான்மைதான் நம்மிடமும் குடிகொண்டிருக்கும்" என்ற உண்மையினை உணர்ந்து சகிப்புணர்வையும், நல்லெண்ணத்தையும் வளர்த்துக் கொள்வதுதான் இதற்கு மாற்றுவழி. வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டும் மனித வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் இயன்ற வரையில் பிக்காஸோ இந்த ஓவியத்தில் சித்தரித்திருப்பதாக நம்புகிறேன்.

ஓவியர் என்ற முறையில் பிக்காஸோவின் கடந்த காலக் கலைத் திறனுக்கு ஒரு தொகுப்புரையாக "குவர்னிக்கா" திகழ்கின்றது. இதில் சித்திரிக்கப்பட்டுள்ள மாறுபட்ட பாணிகளும் பருவங்களும், மிகவும் எதிரிடையான நுட்பங்களுங்கூட சக வாழ்வு கொண்டு ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருக்க இயலும் என்ற அரிய உண்மையை உணர்த்துகின்றன. எனவே, "குவர்னிக்கா" ஒரு போர் ஓவியம் மட்டுமன்று. அது மானுட சகவாழ்வைப் போதிக்கும் நீதியோவியமுமாகும். பிக்காஸோ கொண்டிருந்த அதே மானோதிடமும், உணர்ச்சியும் கொண்டிருந்தால் தான், இதைப்போன்ற ஒத்திசைவான ஓவியத்தில் இத்தை கைய சுமுக உணர்வினைக் கொடுத்திட இயலும் என் பதையும் இது அறிவுறுத்துகின்றது. இந்த உணர்ச்சிக்குப் பெயர்தான் அன்பு. அவதியுற்ற வர்கள் மீதான கொடூரமாகக் கொல்லப்பட்டவர்களின் மீதான அபரிமித மான அன்பு காரணமாகவே, இவர் சாகாவரம் பெற்ற இந்த அற்புதப் படைப்பினைத் தீட்டினார்.

- ஜோஸப் பலாவ் இ ∴பேபர்



'நான் டென்னிஸ் ரிட்ச்சி. 1941 ஆம் வருடம் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி நியூயோர்க் நகரில் உள்ள ப்ரான்க்ஸ்வில் என்ற செல்வச் செழிப்பான தொரு கிராமத்தில் பிறந்தேன். என் அப்பா அலிஸ்டைர் ரிட்ச்சி பெல் பரிசோதனைக் கூடத்தில் ஸ்விட்சிங் சிஸ்டம் எஞ்சினியராகப் பணியாற்றினார். அம்மா ஜீன் மெக்ஜீ வீட்டைக் கவனித்துக்கொண்டிருந்தார். என் பாலியப் பருவமும் பள்ளிப்படிப்பும் நியூ ஜெர்சியில் நிகழ்ந்தன. படிப்பில் நான் கெட்டிக்காரனாகவே இருந்தேன்.

ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் இளநிலை இயற்பியல் படித்தேன். அப்போது ஹார்வார்ட்டில் இருந்த Univac I என்ற கணினி பற்றிய ஒரு விரிவுரையைக் கேட்க நேர்ந்தது. அதுதான் கணினியியல் மீதான காதல் எனக்குள் உண்டாவதற்கான முதல் விதை. பின்னர் கணினிகள் பற்றி, குறிப்பாக

# "சி" மொழித் தந்தை தன்னைப்பற்றி....

அவற்றின் நிரலாக்கம் பற்றித் தேடிப் படிக்கத் தொடங்கினேன்.

1967 இல் என் அப்பா வேலை பார்த்த பெல் பரிசோதனைக்கூடத்திலேயே எனக்கும் வேலை கிடைத்தது. இளநிலையில் நான் கற்றுக்கொண்ட விஷயம், இயற்பியல் என்பது எனக்கு ஒத்துவராது என்பதையே. அதேபோல் முதுநிலையில் நான் கற்றுக்கொண்ட விஷயம் அல்காரிதம் எனக்கு ஒத்துவராது என்பதையே. இவ்வாறுதான் நான் மெல்ல கணினியியலை வந்தடைந்தேன்.

கோப்புகளைச் சுலபமாக உருவாக்க, திருத்த, சேமிக்க, அச்சிட, அழிக்கவல்ல ஓர் இயக்குதளம் ஒரு கணினியிலிருந்து மற்றொன்றுக்கு சிக்கலின்றித் தொடர்புகொள்ள உதவும் ஓர் இயக்குதளம் சாதாரணர்களும் பயன்படுத்தத் தோதான, சுலபமான ஆணைகளைக் கொண்ட ஓர் இயக்குதளம் வெளி மென்பொருட்களைப் பிரச்சினை இன்றி இயக்க அனுமதிக்கும் ஓர் இயங்குதளம் சிறிய கணினிகளுக்குத் தகுந்தமாதிரியான மலிவான விலையிலான ஓர் இயங்குதளம். இதுதான் எங்கள் கனவு. மாதக்கணக்கில் கடுமையாக இதற்கு உழைக்க நேர்ந்தது. யூனிக்ஸ் (Unix) இயங்குதளம் உருவானது.

நிறைய சிறிய கணினிப் பயனர்கள் யூனிக்ஸ் இயங்கு தளத்துக்கு மாறினார்கள். கல்விக்கூடங்கள், அரசாங்க அலுவலகங்கள், வணிக நிறுவங்கள் என எல்லா இடங்களிலும் யூனிக்ஸைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். யூனிக்ஸ் உலகெங்கிலும் ஒரு மோசமான தொற்றுநோய்போலப் பரவத் தொடங்கியது.

யூனிக்ஸ் இயங்குதளத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே முதலில் C மொழியை உருவாக்கினேன். பின்னர் யூனிக்ஸ் என்ற நோக்கத்தைத் தாண்டி C மொழியைப் பல்வேறு அமைப்பு நிரலாக்கங்களுக்கு (System Programming), பயன்பாட்டு நிரலாக்கங்களுக்கு (Application Programming) பயன்படுத்தத் தொடங்கினார்கள். அதன் விஸ்தரிப்பின் பிரம்மாண்டம் அதன் பிரம்மாவான எனக்கே வியப்பளிக்கக்கூடியதாகவே இருந்துவருகிறது.

கிட்டத்தட்ட நாற்பதாண்டுகள் பெல் பரிசோதனைக்கூடத்துடன் இணைந்து பணிபுரிந்திருக்கிறேன். 2007 இல் பணி ஓய்வு பெறும்போது பெல் கணிமை மற்றும் மென்பொருள் துறையின் தலைவராக இருந்தேன். இப்போது பார்க்கையில் கணிமைக்கான என் ஆகச்சிறந்த பங்களிப்பு என யூனிக்ஸ் உருவாக்கத்தில் பங்கெடுத்ததையும் C மொழியை வார்த்தெடுத்ததையுமே சொல்வேன்.

தற்போது இந்த 2011 இல் 70 வயதாகிறது. நியூ ஜெர்சியின் பெர்க்லி ஹைட்ஸ் பகுதியில் இருக்கும் என் பெரிய வீட்டில் முழுக்கவே தனிமையில் அடைந்து கிடக்கிறேன். ப்ரோஸ் டேட் புற்று நோய்க்கான சிகிச்சை நடக்கிறது. உடன் இதயம் சம்பந்தப்பட்ட நோய்களும். ஆனால் நான் இப்பூமிக்கு வந்த கடமையைச் சரியாக முடித்துவிட்டேன். தொழில்நுட்பத்தில் மனித குலத்தின் அடுத்தகட்ட நகர்வுக்கு முக்கியமானதொரு பங்களிப்பைச் செய்திருப்ப தாகவே தோன்றுகிறது.

அது ஒருவித திருப்தியையும் மனநிறைவையும் அளிக்கிறது.

- *நன்றி : CSK*



# நாய்க் கடி இலேசல்ல!

நாய்க் கடி என்றால், முதலில் நமக்குத் தெரிய வேண்டிய தகவல், அது நல்ல நாயா, வெறிபிடித்ததா என்பதுதான். வெறிபிடித்த நாய் என்றால் பயந்தடித்துக் கொண்டு சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். அந்த நாய்க்கு வெறிநோய் ஊசி போட்டிருந்தால் நாம் தப்பித்தோம், இல்லை எனில பிரசசினைதான். ஆனால் எப்படியானாலும் நாய் கடித்த உடனே அந்த இடத்தை நன்கு கழுவி உடனே மருத்துவ சிகிச்சை செய்ய வேண்டும்.

காயம் பட்ட/ கடிபட்ட இடத்தை சுமார் 15 நிமிடநேரம் தொடர்ந்து சோப்புத் தண்ணீர்/சோப்புத்தூள்/டிங்க்சர் அயொடின்/வெறிநோய் வைரஸைக் கொல்லும் பொருட்களால் அந்த இடத்தை தொடர்ந்து கழுவி, வெறிநோய் வைரஸைக் கொல்லவேண்டும். நிறைய தண்ணீர் ஊற்றிக் கழுவவேண்டும். பின் தடுப்பூசிகளை போடவேண்டும். ஒரு சில மணித் துளிகளுக்குள் வெறிநோய் எதிர்ப்பானாகிய இம்முயூனோ குளோபுலின் (immune globulin) போடவேண்டும். பின் அதற்கு 4-5 தடுப்பூசியும் கடிபட்ட இடத்திற்கருகிலேயே போடவேண்டும். வெறிநோய் வராமல் இருக்க தடுப்பூசியை முன்னமேயே போடலாம்.

வெறி பிடித்த நாயின் கடி/எச்சில் மூலம் வருவதுதான் வெறிநோய் (Rabies). ரேபிஸ் (Rabies) என்பது ஒரு லத்தீன் வார்த்தை. இதன் பொருள், பைத்தியம் பிடித்த/சித்த சுவாதீனமற்ற என்பதாகும். வெறி நோயினால், அளவுக்கதிகமான மூளை வீக்கம் (encephalitis) ஏற்படும். பின்னர் மூளையின் செயல்பாடுகளை மாற்றியமைத்து கண்டபடி வைரஸின் போக்கில் செயல்பட வைக்கும். நமது இயல்பு நிலை பறி போய்விடும்.

மனிதன் எப்போது நாய் வளர்க்கத் தொடங்கினானோ அப்போதே, வெறிநோய் பாதிப்பும் ஏற்பட்டிருக்க வேண்டும் எனத் தவகல்கள் சொல்லுகின்றன. மனிதனுக்கு நாயுடன்தான் முதலில் பழக்கம் ஏற்பட்டிருந்தது. அதன் ஆதாரமாக, இஸ்ரேலில் ஒரு பெண்ணின் உடலுடன் ஒரு நாயும் சேர்த்து அடக்கம் செய்யப்பட்ட மம்மி கிடைத்துள்ளது. இதன் வயது சுமார் 12,000 வருடங்கள். கி.மு 800-700களில் ஹோமர் பாதிப்பு வந்த நாய் பற்றி எழுதி உள்ளார். கி.மு. 400ல் வாழ்ந்த அரிஸ்டோட்டில் நாய்கள் நோயினால் பைத்தியம் பிடித்து திரிந்ததாகவும், அவை எரிச்சலோடு மற்ற விலங்குகளை கடித்ததாகவும் எழுதியுள்ளார்.


பொதுவாக வெறிநோய் இறப்பு என்பது 1885 இல் இதற்கான தடுப்பு மருநது கண்டுபிடிக்கும் வரை தொடர்ந்தது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் வெறிநாய் கடித்தால் 23 ஊசிகள் போடப்படும். அதன் பின், 25 ஆண்டுகளுக்கு முன் நாய் கடிக்கு தொப்புளைச் சுற்றி 14 ஊசிகள் போடுவார்கள். பின்னர் 10 ஆண்டுகளுக்கு முன் 7 ஊசிகள் போட்டனர். இப்போது 3 ஊசிகள் மட்டும்தான். வலியும் அவ்வளவாக இருப்பதில்லை. முதல் 2 ஊசி ஒரு வார இடைவெளியிலும், கடைசி ஊசி 3 வாரத்துக்குப் பின்னும் போடுவார்கள். வெறிநோய்த் தடுப்பு ஊசி சுமார் 3 வருடங்களுக்கு வெறிநோயிலிருந்து பாதுகாப்புத் தரும். *செப்டெம்பர் 28 ஆம் திகதி உலக வெறிநோய் தினமாக அறிவிக்கப் பட்டுள்ளது.*

- சோ. மோகனா



# மறுப்புகளின் கதை

சினிமாக்களுக்கு மறுப்புகள் தொடர்ந்து வந்திருக்கின்றன. "இந்தியன" படம் வெளிவருமுன் சென்ஸார் அதிகாரியாக இருந்த ஞானராஜசேகரன் என்னை அலுவலகத்துக்கு அழைத்தார். 'நடிகை சுகன்யா ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அவரை "டூப்" வைத்து துகிலுரித்த மாதிரி காண்பித்ததாக யாரோ சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காட்சியை அனுமதிக்கக் கூடாது' என்று எழுதியிருப்பதாக சொன்னார். "அப்படி ஒரு காட்சி இல்லையே. இல்லாத காட்சியை எப்படி வெடடப் போகிறீர்கள்" என்று கேட்டேன். சுகன்யாவை இந்தியனில் கொஞ்சம்போலும் இளமையாகக் காட்டிவிட்டு பெரும்பாலும் கிழ கமலஹாசனுக்கு மேட் சிங்காக சுருக்கங்கள் விழுந்து மூதாட்டியாகக் காட்டியதில் அவருக்கு மிகுந்த அதிருப்தி இருந்தது. தெரியாத்தனமாய் ஷங்கர் படம் என்பதால் ஒப்புக்கொண்டு விட்டார்.



ஷங்கரின் முதல்வன் படத்தின் மறுப்பு வேறு விதமாக இருந்தது. "அதில் வரும் முதல்வரின் பாத் திரம் எந்தவிதத்திலும் தமிழக முதல்வர் கலைஞரை தோற்றத்திலோ பேச்சிலோ பிரதிபலிக்காமல் இருக்க பிரத்தியேக கவனம் எடுத்துக் கொள்ளுங்க" என்று ஷங்கரிடம் சொன்னேன். அந்தப் பாத்திரத்தில் நடித்த ரகுவரனுக்கு நரைத்த தலையும் ஜிப்பாவும் தடுமாற்ற தமிழ் உச்சரிப்பும் மிகவும் வித்தியாசமாக இருந்தது. எந்தவிதத்திலும் தமிழக முதல்வரைப்போல இல்லை. ஒரே ஒரு இடத்தில் மட்டும் "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க" என்ற திருக்குறள் பயன்படுத்தி இருந்தேன். போச்சு! அது போது மானதாக இருந்தது மறுப்புக்கு. எந்த முதல்வர் திருக்குறள் மேற்கோள் காட்டுகிறார் என்று மதுரையில் அந்தப் படத்துக்கு பெரிய மறுப்பு ஊர்வலம் நடத்தினார்கள்.

"பாய்ஸ்" படம் வேறுவிதமாக மறுப்பை சந்தித்தது. ஆனந்த விகடன் பத்திரிகை அதை "சீ" என்று ஒரே எழுத்தில் விமர்சனம் செய்திருந்தது. விடலைப் பிள்ளைகள் கதை. விளையாட்டுப்போக்கும், பெண்கள்மேல் ஆர்வமும் கலந்த அவர்கள் கதைக்கு தமிழ்நாட்டில் இருந்த பல மாதர் இயக்கங்கள் தினம் தினம் எதிர்ப்புத் தெரிவித்தன. சில பெண்மணிகள் தியேட்டர் வாசலில் சென்று "இந்தப் படத்தைப் பார்க்காதே" என்று மறியல் செய்தார்கள். இந்த மறுப்புகளுக்கெல்லாம் ஆதார காரணங்கள் இருந்தன. அவை சினிமாவுக்கு வெளிப்பட்டு தம்மேல் கவனம் ஈர்க்கும் தன்மை கொண்டிருந்தன. ஷங்கரின் படத்திற்கு மறுப்புத் தெரிவித்தால் நிச்சயம் கவனிப்பார்கள். எல்லோருக்கும் பதினைந்து நிமிஷப் புகழ் தேவையாக இருக்கிறது. மறுப்புகளுக்கு அடிப்படைக் காரணங்களைக் கண்டுபிடித்து விட்டால் மறுப்பின் வெறுப்பு மறந்துபோய் சிரிப்புத்தான் வரும்.

- சுஜாதா

# சரிந்து போகும் புலிகளின் செல்வாக்கு

ஒக்டோபர் 29 இல் நெடியவன் தலைமையிலான எல்.ரீ.ரீ.ஈ சார்பான பகுதியினர் ரொறன்ரோவில் அரங்கேற்றிய பொங்குதமிழ் நிகழ்வில் 3000 இற்கும் குறைவானவர்களே பங்கு பற்றியிருந்தனர். கனடியத் தரங்களைப் பொறுத்தவரை இந்தக் கூட்டம் பெரிது என்று கணிக்கப்பட்ட அதேவேளை முன்னர் நடைபெற்ற எல்.ரீ.ரீ.ஈ யினரின் நிகழ்வுகளில் இதே இடத்தில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இம்முறை எண்ணிக்கையில் மிகப் பெரிய



வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதே இடமான குயின்ஸ் பார்க்கில் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு பொங்குதமிழ் நிகழ்வில் 35,000 பேர்கள் வரை கலந்திருந்தார்கள்.

பொங்குதமிழ் போன்ற பொது நிகழ்ச்சிகள் விடுதலைப் புலியினரின் அனுசரணையுடன் நடத்தப்படும் ஒரு நிகழ்ச்சி என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. 2011 ஒக்டோபர் 29 இல் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு 2500 3000 வரையானவர்களே சமூகமளித்திருந்த போதிலும் 'ரொறன்ரோ சண்' பத்திரிகை அங்கு கிட்டத்தட்ட 5000 பேர் வரை கலந்துகொண்டதாக தெரிவித்திருந்தது.

எல்.ரீ.ரீ.ஈ சார்பான பெரும்பாலான இணையத் தளங்கள் எண்ணிக்கையை குறிப்பிடாமல் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டார்கள் என்றும், அதேவேளை சில ஊடகங்கள் ரொறன்ரோ சண் பத்திரிகையின் பெருப்பிக்கப்பட்ட தொகையான 5000 த்தை மேற்கொற்காட்டியும் குறிப்பிட்டிருந்தன.



பொங்குதமிழ் என்பதன் கருத்தான தமிழர்களின் எழுச்சி என்பதனை தமிழர்களின் விடுதலைப் பேரணி என சில ஊடகங்கள் வருணித்திருந்தன, இருந்தாலும் தமிழ் ஊடகங்களின் மிகைப்படுத்தல்களுக்கு அப்பால் அது எல்.ரீ.ரீ.ஈ யினருக்கு ஒரு தோல்வியே.

இந்த நிகழ்ச்சி கனடிய தமிழர் தேசிய பேரவை (என்.சீ.சீ.ரி), மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் (ரி.ஜி.ரி.ஈ) ஜனநாயக குழுவினராலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவை இரண்டுமே நோர்வேயை தளமாகக் கொண்ட நெடியவன் என அழைக்கப்படும் பேரின்பநாயகம் சிவபரன் என்பவரின் ஒட்டுமொத்த தலைமைத்துவத்தின் கீழ் இயங்குபவை.

நெடியவன் தலைமையிலான எல்.ரீ.ரீ.ஈ சார்பான சக்திகள் மிகவும் குறைவான ஒரு சுயவிபரத்தை பின்பற்றி சகல தமிழர் சமூகங்களினதும் மற்றும் இளையோர்களினதும் சார்பாக இதில் கலந்து கொள்ளும்படி கனடாவில் வாழும் தமிழர்களை அழைத்திருந்தது.

நெடியவன் விசுவாசிகளின் பொங்கு தமிழ் நிகழ்ச்சி நடத்தும் முயற்சியினை மற்றொரு எல்.ரீ.ரீ.ஈ சார்பான சக்திகளின் பிரிவினரால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. இந்தப் பிரிவினர், தற்போது பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியில் இருந்து இயங்கிவரும் விநாயகம் என்று அழைக்கப்படும் எல்.ரீ.ரீ.ஈயின் சிரேட்ட புலனாய்வுத் தலைவர் சேகரப் பிள்ளை வினாயக மூர்த்திக்கு விசுவாசமானவர்கள்.



எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரன் பகிரங்கமாக வெளி வந்ததின் பின்னரே பொங்கு தமிழ் நிகழ்ச்சி நடத்தபபட வேண்டும் என்று கூறித்தான் வினாயகம் விசுவாசிகள் நெடியவன் விசுவாசிகளை எதிர்த்தனர்.

கனடாவில் ஏற்பட்ட இந்த பொங்கு தமிழ் உராய்வு, வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ பிரிவுகளின் தலைவர்களான நெடியவன் மற்றும் வினாயகம் ஆகியோரிடையே தற்போது நடந்துவரும் அதிகாரப் போராட்டத்தின் ஒரு வெளிப்பாடுதான்.

வினாயகம் பிரிவினர் தமிழர்களை இந்த பொங்குதமிழ் நிகழ்வினைப் புறக்கணிக்க கோரி துண்டுப் பிரசுங்களை வினியோகித்தும் மற்றும் சுவரொட்டிகளை ஒட்டியும் வேண்டிக்கொண்டனர். நெடியவன் பகுதியினர் இதற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுவினர் கனடாவுக்கு வருகை தருவதையொட்டி அவர்கள் இந்நிகழ்வில் பேசுவதற்கு வசதியாக நெடியவன் பிரிவு எல்.ரீ.ரீ.ஈயினர் இந்நிகழ்விற்கான திகதியாக ஒக்டோபர் 29 ஐ நிச்சயித்திருந்தனர்.

ரி.என்.ஏ யின் சம்பந்தன், சேனாதி ராஜா, மற்றும் சுமந்திரன் ஆகியோர் பேரணியில் பேசுவதைக் கேட்க கூட்டம் பெரியளவில் கூடும் என்று பொங்குதமிழ் ஏறபாட்டாளர்கள் கணக்குப் போட்டார்கள்.

எல்.ரீ.ரீ.ஈ யை உத்வேகப்படுத்தும் ஒரு கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு மறுத்துவிட்டதுடன் ரொறன்ரோவுக்கு அவர்கள் வருகை தரும் நேரத்தை அந்த நிகழ்ச்சியை சாமர்த்தியமாக தவிர்க்கும் வகையில் 29 ஆம் திகதி நள்ளிரவாக மாற்றிக் கொண்டனர்.

எல்.ரீ.ரீ.ஈ சக்திகளின் அழுத்தங்கள் இருந்தபோதும் கூட்டமைப்பு பொங்கு தமிழ் நிகழ்வில் பங்கேற்பதிலிருந்து ஒதுங்கிக் கொண்டது. கூட்டமைப்பினரின் கவர்ச்சி இல்லாதபடியால் நிகழ்ச்சிக் கான வரவு குறைந்து விட்டது.

எல்.ரீ.ரீ.ஈ யின் இராணுவம் மே 2009 இல் தோல்வியுற்றதிலிருந்து, கனடாவில் புலிகள் சார்பான நிகழ்வுகளுக்கு வருகை தரும் கூட்டத்தினரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது.

பெரியதோர் கூட்டத்தைக் கூட்டும் ஆவலான முயற்சியாக எல்.ரீ.ரீ.ஈ சக்திகள் உள்ளூர் தமிழ் ஊடகங்களை இயன்ற வரை பயன்படுத்தின. இலவச போக்குவரத்து சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இத்தகைய முயற்சிகள் மேற்கொளளப்பட்டிருந்தாலும், நிகழ்ச்சிக்கு வரவு தந்தவர்களின் எண்ணிக்கை 2500 3000 ஆக மட்டுமே இருந்ததால், நிகழ்ச்சி ஒரு புஸ்வாணம் போலாகிவிட்டது.

'ரொறன்ரோவை ஆக்கிரமி' எனும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அநேக தமிழர் அல்லாத எதிர்ப்பாளர்களும், பார்வையாளர்களாக இதில் கலந்துகொண்டதால் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது.

கலந்து கொண்டவர்களில் பலர் எல்.ரீ.ரீ.ஈயின் நிறங்களான சிவப்பு மற்றும் மஞ்சள் ஆடைகளை அணிந்திருந்தனர். பிரபாகரனின் படம் பதித்த பதாகைகள் மற்றும் தமிழ் ஈழக் கொடிகள் எனப்படும் புலிகளின் கொடிகளையும் காணக்கூடியதாக இருந்தது.

ரொறன்ரோவில் நடந்த பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை மிக மோசமாக இருந்தது கனடியத் தமிழ் புலம் பெயர்ந்தவர்களின் இடையே எல்.ரீ.ரீ.ஈ யின் செல்வாக்கு சரிவடைந்துள்ளது என்பதற்கு ஒரு சாட்சியாக காணப்படுகிறது.


வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ யினரிடத்து வினாயகம் பிரிவினரின் கை, படிப்படியாக நெடியவன் பிரிவினரை விட உயர்ந்து கொண்டே போகிறது என்பதையும் இந்தத் தோல்வி மேலும் வெளிப்படுத்துகிறது. - **டி.பி.எஸ் ஜெயராஜ்**

---

## அதிசய மனிதன்

கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை மீட்பதற்காகப் பொலிஸ் அந்த நகரத்தில் பல வீடுகளைச் சோதனை செய்தார்கள்.

பயந்து போன மக்கள், கொள்ளையடித்து வந்த பொருட்களை நடு இரவில் ஜன்னல்களுக்கு வெளியே விட்டெறிந்தார்கள். சட்டத்தின் முறையற்ற நடவடிக்கைக



ளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நேர்மையாக வாங்கிய பொருட்களைக் கூட சிலர் விட்டெறிந்தார்கள்.

ஒருவனுக்கு மட்டும் பிரச்சினை இருந்தது. ஒரு மளிகைக்கடை சூறையாடப்பட்ட போது, எடுத்து வந்த இரண்டு பெரிய சீனி மூட்டைகள் அவனிடம் இருந்தன.

இரவு அவன் எப்படியோ அவற்றை அயலில் இருந்த பொதுக் கிணற்றுக்கு இழுத்துச் சென்றான். ஒரு மூட்டையைச் சுலபமாகக் கிணற்றுக்குள் தூக்கிப் போட்டான். இரண்டாவதைத் தூக்கிப் போடும் போது, அதோடு சேர்ந்து அவனும் கிணற்றுக்குள் விழுந்தான்.

அவனது அலறல் எல்லோரையும் எழுப்பி விட்டது. கிணற்றுக்குள் கயிறு விட்டுப் பார்த்தார்கள். பயன் ஏதும் இல்லை. இறுதியாக இரண்டு வாலிபர்கள் உள்ளே இறங்கி, விழுந்தவனை வெளியே தூக்கி வந்தார்கள். ஆனால், அவன் அடுத்த சில மணி நேரங்களில் இறந்து போனான்.

அடுத்த நாள் காலை அந்தக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துக் குடித்த போது, அது மிகவும் இனிப்பாக இருந்தது. அன்று இரவிலிருந்து அந்த அதிசய மனிதனின் சமாதியில், விளக்குகள் ஏற்றப்பட்டு பிரார்த்தனை செய்யப்பட ஆரம்பித்தது.

- சாத்த் ஹஸன் மாண்டோ

---

அமெரிக்காவில் வறுமை பரவி வருகிறது. ரோம் பற்றி எரிகையில் ஃபிடில் வாசித்தான் நீரோ மன்னன் என்று ஒரு புராணக் கதை கேட்டிருக்கிறோம். அது போல அமெரிக்காவின் இரு அரசியல் கட்சிகளில் பெரும்பான்மையாக உள்ள இலட்சாதிபதிகளும், கோடீஸ்வரர்களும் மக்கள் வறியோரானால் எமக்கென்ன என்று மதர்ப்பாக இன்னும் அரசின் செயல்பாட்டை எப்படிக் குறைப்பது, மிகப்பெரும் பணக்காரர்களுக்கு வரியே இல்லாமல் செய்வது எப்படி, ஏழைகளை மேன்மேலும் வரி கொடுக்கச் செய்வது எப்படி என்று சூடாக விவாதம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் வியப்பேதும் இல்லாத வகையில் அமெரிக்க மத்திய வர்க்கம், முன்னெப்போதையும் விட மூடத்தனத்தால் நிரம்பி இருப்பதால், இந்த விவாதங்களை ஆர்ப்பரிப்புடன் வரவேற்று




# அமெரிக்காவில் பரவும் வறுமை

தம் வறுமை நிரந்தரமாகவும் ஆழமாகவும் ஆக வழி செய்கிறது. தம் புதைகுழியை ஒரு மக்கள் இத்தனை ஆசையோடு தாமே தோண்டிக் கொள்வார்கள் என்பது நம்மிடமிருந்துதான் அவர்களுக்குச் சென்றிருக்க முடியும்.

உலகைக் கொள்ளையடிப்பது எப்படி என்று அமெரிக்காவின் பெருநிதி நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருந்தபோது அதைக் கரகோஷத்துடன் வரவேற்ற அமெரிக்க மக்களின் குரல்வளையில் அமெரிக்க/பன்னாட்டு நிதி நிறுவனங்களின் கோரப் பற்கள் பதிந்த நிலையில் இன்னும் அமெரிக்க மக்கள் விழிக்கவில்லை. அமெரிக்காவின் மத்திய வர்க்கம் எப்படி உடைந்து ஏழ்மையில் ஆழத் தொடங்கி விட்டது என்பதை விவரங்களோடு அந்நாட்டுப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

உணவு வாங்கப் பணம் இல்லை, வீட்டுக் கடனுக்கு வட்டி கட்டப் பணம் இல்லை என்று தெருவில் வாழ நேர்கிற நிலையில் உள்ள முன்னாள் மத்திய வர்க்கத்தினர் இன்று ஏழைகளுக்கு இலவச உணவு கொடுக்கும் "சூப் கிச்சன்"களில் வரிசையில் நின்ற வண்ணம் தம் நிலையை நினைத்துக் கண்ணீர் சிந்துகிறார்கள். ஆனால் இன்னும் கோடீஸ்வரர்களுக்கு வரி விதிக்கக் கூடாது என்ற அரசியல் கொள்கையையே ஆதரிக்கிறார்கள் என்பதுதான் விசித்திரம்.

இங்கே வெறும் ரோசப் பேச்சுக்களை நம்பி எவ்வளவு வேண்டுமானாலும் வதைபடவும் வாழ்வைச் சிதைக்கவும் தயாரான மனநிலை உருவாக்கப்படுகிறதோ, அப்படி ஒரு மூளைச் சலவை செய்திருக்கிறது அமெரிக்க முதலாளியம்.

# உலகின் அதிகாரம் மிக்க தலைவர்கள் இடம்பிடித்தனர் மன்மோகன், சோனியா

(புதுடில்லி)

உலகின் அதிகாரமிக்க தலைவர்களாக போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள இந்த ஆண்டின் பட்டியலில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். அமெரிக்காவின் பிரபல பொருளாதார இதழான போர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் உலகின் செல்வாக்கு மிகுந்த மனிதர்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டின் டொப் 20 பேர் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா முதலிடத்தில் இருக்கிறார். ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின், சீன ஜனாபதிபதி ஹூ ஜின்டோ 2ஆவது, 3ஆவது இடங்களைப் பிடித்துள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பட்டியலில் 9ஆவது இடத்தில் உள்ளார். இந்தியாவின் மிகவும் செல்வாக்கு வாய்ந்த அரசியல்வாதி சோனியா. இருமுறை பிரதமர் பதவியை மறுத்தவர் என அதில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது. கடந்த முறை வெளியான பட்டியலில் சோனியாவுக்கு



11ஆவது இடம் அளிக்கப்பட்டிருந்தது. இந்தப் பட்டியலில் பிரதமர் மன்மோகன் சிங் 19 ஆவது இடத்தில் உள்ளார். கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பயின்ற பொருளாதார நிபுணரான மன்மோகன், இந்தியாவின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு முக்கிய பங்காற்றியவர்.

கடந்த 7 வருடங்களாக, நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்து செல்கிறார் என்று பிரதமர் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதுதவிர, ரிலையன்ஸ் குழுமத்தின் தலைவர் முகேஷ் அம்பானி (35ஆவது இடம்), தொழில் அதிபர் லட்சுமி மிட்டல் (47), விப்ரோ தலைவர் அசிம் பிரேம்ஜி (61), பாகிஸ்தானின் இராணுவத் தலைவர் அஸ்பக் பர்வேஸ் கயானி (34), திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா (76) ஆகியோரும் 100 பேர் கொண்ட பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

முதல் 10 இடங்களுக்குள் ஜெர்மன் பெண் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் (4), மைக்ரோ சாப்ட் தலைவர் பில்கேட்ஸ் (5), சவுதி அரேபிய பட்டத்து அரசர் அப்துல்லா பின் அப்துல் அஜிஸ் அல் சவுத் (6), பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரூன் (10) ஆகியோர் உள்ளனர்.

## அணுமின் நிலையத்துக்கு எதிராக கூடங்குளத்தில் ஆர்ப்பாட்டம்

(தூத்துக்குடி)

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக நேற்று கூடங்குளத்தில் மிகப் பெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை எதிர்ப்பாளர்கள் உதயகுமார் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றுக்காலையில் செய்தியாளர்களிடம் பேசிய உதயகுமார்,

வெளி நாட்டுச் சக்திகளின் தூண்டுதலில் நான் செயற்பட்டு வருவதாக அணுமின்சக்திக் கழகத் தலைவர் ஜெயின் பேசியுள்ளார். இதனால் அவருக்கு எதிராக நான் வழக்குத் தொடுக்கவுள்ளேன் என்றார்.

# வடிவேலுவின் நிலைமையே விரைவில் குஷ்புவுக்கும் வரும்

(சென்னை)

நடிகர் வடிவேலுவை ஆரம்பத்திலேயே எச்சரித்தேன். தற்போது அவரைக் கைவிட்டு விட்டார்கள். படம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார். குஷ்புவுக்கும் எச்சரிக்கை விடுக்கிறேன். தி.மு.க.வினர் சக்கையாய் பிழிந்து விட்டு வெளியே தள்ளி விடுவார்கள்.



வேலூர் நகர அ.தி.மு.க சார்பில் 40 ஆவது ஆண்டுத் தொடக்க விழா பொதுக்கூட்டம் நேற்று அண்ணா கலையரங்கம் அருகே நடந்தது. இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் நடிகர் ராதாரவி கலந்து கொண்டு பேசிய போது இவ்வாறு தெரிவித்தார்.

அ.தி.மு.க அரசு பொதுமக்கள் நன்மைக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயற்படுத்தபடுகிறது. தவறு செய்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கிறார்கள். இதனைப் பழிவாங்கும் செயல் என்கிறார்கள். புதிய தலைமை செயலகம் கட்டடப் பணி முழுமையாக நடைபெறவில்லை. அதனால் தான் முதலமைச்சர் கோட்டையில் தலைமைச் செயலகம் செயற்படும் என அறிவித்தார்.

நலத்திட்டங்கள் தொடர ஜெயலலிதா அரசுக்கு மக்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்..

## அருணாச்சலப் பிரதேசம் சீனாவின் ஒரு பகுதியா?

(சென்னை)

அருணாச்சலப் பிரதேஷ் மற்றும் லடாக் பகுதிகள் சீனாவின் ஒரு பகுதி என்று சிற்றேடு காட்டுவதாக டில்லியில் நடைபெற்ற சீன நிறுவனத்தின் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இந்தியாவுக்கான சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அருணாச்சல மற்றும் லடாக் பகுதிகள் சீனாவின் ஒரு பகுதி என்று காட்டும் வரைபடத்தைப் பற்றி பத்திரிகையாளர்கள் கேட்டபோது “வாயை மூடு” என்று சூடாகப் பதிலளித்தார். அதே நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் இணைச்செயலர் ஏற்கனவே இந்த விடயம் தொடர்பாக சீனத் தூதுவரிடம் விவாதித்தது குறிப்பிடத்தக்கது.

# அண்ணா நூலகம் இடமாற்றம் உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடை




(சென்னை)

சென்னையில் கோட்டூர் புரத்தில் இயங்கிவந்த அண்ணா நூலகத்தை இட மாற்றம் செய்வதாக முதல்வர் ஜெய லலிதா அறிவித்தார்.

ஜெயலலிதா அறிவித்ததை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்தப் பொதுநல மனு மீது விசாரணை நடத்திய நீதிபதி, நவீன வசதிகள் கொண்ட அண்ணா நூலகத்தை இடமாற்றம் செய்வது ஏன்? குழந்தைகள் மருத்துவமனை கட்ட அரசுக்கு வேறு இடம் கிடைக்கவில்லையா? என கேள்விகள் எழுப்பினார்.

இதையடுத்து, அண்ணா நூலகத்தை இடமாற்றம் செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்துத் தீர்ப்பளித்தார்.

மறு உத்தரவு வரும் வரை இடைக் காலத் தடை விதிப்பதாக அறிவித்த நீதிபதி, இது தொடர்பாக தமிழக அரசு 6 வார காலத்துக்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் தன் உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.



உத்தரப் பிரதேசம் வந்திருந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலர் ராகுல் ஜூனாபூர் மாவட்டத்தில் உள்ள லால்பூர் கிராமத்தில் ஊர் பெரியவர்கள் மற்றும் பொதுமக்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# “ஸ்பெக்ட்ரம்” ஊழல் விவகாரம் தகவல் வெளியிட மறுப்பு

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் காற்றில் பறக்கிறது

(புதுடில்லி)

2ஜி விவகாரம் குறித்த தகவல்களை தற்போது அளிப்பது பாராளுமன்ற உரிமையை மீறும் செயல். எனவே இதுபற்றிய விவரங்களைத் தற்போது தெரிவிக்க முடியாது என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் விற்கப்பட்டது தொடர்பாக பிரதமர் அலுவலகத்துக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கும் இடையே நடந்த தகவல் பரிமாற்றங்கள் அடங்கிய விவரங்களை அளிக்கும்படி விவேக் கார்க் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

ஆனால் இதுகுறித்த விவரங்களை தெரிவிக்க முடியாது என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ள பதிலில் கூறப்பட்டுள்ளதாவது: 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்றப் பொதுக் கணக்கு குழு, நாடாளுமன்றக் கூட்டுக் குழு ஆகியவை விசாரித்து வருகின்றன.

இக்குழுக்களின் ஆய்வு அறிக்கை நாடாளுமன்றில் இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை. இதுபோன்ற சூழ்நிலையில் 2ஜி விவகாரம் பற்றிய விவரங்களை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வெளியிட முடியாது. அவ்வாறு வெளியிட்டால் அது நாடாளுமன்ற உரிமையை மீறிய செயலாகும்.

இதுகுறித்து விவேக் கார்க் கூறுகையில், பிரதமர் அலுவலகத்தின் இந்தப் பதில் வெளிப்படையான சட்ட நடவடிக்கைகளுக்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

# கால்நடை மருத்துவக் கல்லூரி ஒரத்தநாட்டில் அமைக்க ஏற்பாடு

(சென்னை)

ஒரத்தநாட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை அமைக்க முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

கால்நடை மருத்துவர்களை அதிகம் உருவாக்கும் வகையில் கால்நடைகள் அதிகமாக உள்ள பகுதியான தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என அழைக்கப்படும் தஞ்சை டெல்டா பகுதியில், அப்பகுதி விவசாய பெருமக்களின் நீண்ட நாளைய கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் தமிழக முதலமைச்சர் மேற்படி உத்தரவை வழங்கியுள்ளார்.



தமிழ்நாட்டில் உள்ள கால் நடைகளுக்குத் தரமான மருத்துவ வசதியை அளிக்க வேண்டுமெனில், சிறந்த கால்நடை மருத்துவர்களை உருவாக்குவது அவசியமான ஒன்றாகும்.

தற்போது தமிழ்நாட்டில் இயங்கி வரும் இரண்டு கால் நடை மருத்துவக் கல்லூரிகளால் கால்நடை மருத்துவர்களின் தேவை நிறைவு செய்யப்படவில்லை.

# ஐஸ்வர்யாவிற்கு 11.11.11 இல் சிசேரியன்



நடிகை ஐஸ்வர்யாராய்க்கும், அமிதாப்பச்சன் மகன் அபிஷேக் பச்சனுக்கும் 2007ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி திருமணம் நடந்தது. திருமணத்துக்கு பின்பும் ஐஸ்வர்யாராய் தொடர்ந்து நடித்தார். தமிழில் “ராவணன்”, “எந்திரன்” படங்களிலும் நடித்தார்.

கடந்த ஜூன் 21ஆம் திகதி ஐஸ்வர்யா கர்ப்பமாக இருக்கும் தகவலை மாமனார் அமிதாப்பச்சன் வெளியிட்டார். அதன் பிறகு சினிமாவில் நடிப்பதை நிறுத்தினார். வைத்தியர்களின் ஆலோசனைப்படி சத்தான உணவுகள் சாப்பிட்டு வீட்டில் ஓய்வு எடுத்தார். வயிறு பெரிதாக இருந்ததால் பொது விழாக்களில் பங்கேற்பதையும் தவிர்த்தார்.

ஐஸ்வர்யாராய்க்கு நவம்பர் மாதம் 2ஆவது வாரத்தில் பிரசவம் இருக்கும் என வைத்தியர்கள் கணித்தனர். நாட்கள் நெருங்குவதால் அமிதாப்பச்சன் குடும்பத்தினர் பரபரப்பாகியுள்ளனர். சமீபத்தில் உறவினர்கள், நெருங்கிய நண்பர்களை அழைத்து ஐஸ்வர்யாராய்க்கு வளைகாப்பு நிகழ்ச்சியை விமர்சையாக நடத்தினர். பிரசவ திகதி நெருங்குவதால் அமிதாப்பச்சன் குடும்பத்தினர் பரபரப்பாகியுள்ளனர். வருகிற 11ஆம் திகதி சிசேரியன் மூலம் பிரசவத்துக்கு ஏற்பாடு செய்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அன்றைய திகதி 11-11-11 என்ற அபூர்வ தினமாகக் கருதப்படுகிறது. எனவே அந்த நாளில் பிரசவம் நடக்க வேண்டும் என்று பச்சன் குடும்பத்தினர் ஆர்வப்படுகின்றனர்.

# பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கைதிகளை விடுவிக்க வேண்டும்

## - நீதிமன்றம் உத்தரவு



பாகிஸ்தானின் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கைதிகளை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்துக்கு லாகூர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் தண்டனைக் காலம் முடிந்தும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கைதிகளை விடுவிக்கக் கோரி வழக்கறிஞர் அவைஸ் ஷேக் என்பவர் லாகூர் உச்ச நீதிமன்றில் மனு செய்திருந்தார். பஞ்சாப் மாகாண சிறைகளில் வெளிநாடுகளைச் சேர்ந்த 74 பேர் அடைக கப்பட்டுள்ளதாக மாகாண அரசின் சார்பில் பதில் அளிக்கப்பட்டது.


இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி இஜாஸ் சவுத்ரி, சிறையில் அடைக்கப்பட்டுள்ள தண்டனைக் காலம் முடிந்த வெளிநாட்டுக் கைதிகளை விரைந்து விடுவிக்க வெளியுறவு அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

பஞ்சாப் மாகாண சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் நான்கு பெண்கள் உட்பட 32 பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் விடுவிக்கப்பட்டால் இந்திய சிறைகளில் உள்ள பாகிஸ்தானிய கைதிகளை விடுவிக்க முயற்சி மேற்கொள்வேன் என வழக்கறிஞர் அவைஸ் ஷேக் நீதிபதியிடம் உறுதியளித்தார்.

## உலகச் செய்திகள்

## விண்வெளி நிலையத்தில் இணைந்தது சீன விண்கலம்




(பீஜிங்)

பூமிக்கு மேலே, 343 கி.மீ., தொலைவில், சீனா உருவாக்கி வரும் சர்வதேச விண்வெளி நிலையத்துடன், அந்நாட்டின் "ஷென்ஷாவூ-8" என்ற ஆளில்லா விண்கலம், நேற்று முன்தினம் வெற்றிகரமாக இணைந்தது.

அமெரிக்கா, ரஷ்யா இணைந்து செயற படுத்தி வரும், "மிர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு" போட்டியாக, சீனா தனக்கான ஒரு விண்வெளி நிலையத்தை, 2020க்குள் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக, கடந்த செப்டெம்பர் 29ஆம் திகதி, "தியான் காங்-1" என்ற விண்வெளி ஆய்வு கூடம் வெற்றிகரமாக விண்ணில் நிறுவப்பட்டது.

சீனாவின் கோபிப் பாலைவனத்தில் உள்ள ஜியூக்குவான் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து இரண்டு நாட்களுக்கு முன் "ஷென்ஷாவூ-8" என்ற ஆளில்லா விண்கலம், விண்ணில் ஏவப்பட்டது. வெற்றிகரமாகச் செலுத்தப்பட்ட ஷென்ஷாவூ-8 விண்கலம், நேற்றுமுன்தினம் "தியான்காங்குடன் அமைதியான முறையில் இணைந்தது.

## சகாராப் பாலைவனத்தில் கடாபியின் மகன்?

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் தேடப்பட்டு வரும், லிபிய முன்னாள் அதிபர் முவம்மர் கடாபியின் மகன் சஹாராப் பாலைவனத்தில் ஒளிந்திருக்கலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

லிபியாவில் உள்நாட்டுப் போர் நடந்த போது டுயெரக் பழங்குடி இன மக்கள் பாதுகாப்பாக வெளியேறி வட ஆப்பிரிக்காவில் சஹாராப் பாலைவனத்தில் வாழ்கின்றனர். பரந்து விரிந்த பாலைவனப் பகுதியில் நீண்ட நாட்கள் உயிர் வாழ முடியாது என்று மூத்த பத்திரிகையாளர் ஆதம் தியாம் தெரிவித்துள்ளார்.

## புதிய விசா நடைமுறை இங்கிலாந்து அரசு விதிப்பு



வெளிநாட்டு மாணவர்களை கவருவதற்காக பல நாடுகள் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றன.

இதில் சில நாடுகள் உயர் கல்வி படிக்க மாணவர்கள் படித்து முடித்த பின் 2 ஆண்டு வேலை செய்ய சில நாடுகள் விசா வழங்குகின்றன.

இந்நிலையில் வெளிநாட்டு மாணவர்களுக்கு விசா வழங்க இங்கிலாந்து பல புதிய விதிமுறைகளை அமல்படுத்தி உள்ளது.

குறிப்பாக படித்து முடித்த பின் 2 ஆண்டு வேலை செய்ய வழங்கப்படும் விசா வரும் ஏப்ரலில் இருந்து ரத்து செய்யப்படும் என்று இங்கிலாந்து குடியேற்றத் துறை அமைச்சர் டேமியன் கிரீன் அறிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், இது தொடக்கம் தான். இன்னும் பல புதிய விதிமுறைகள் விரைவில் அமுல்படுத்தப்படும். இங்கிலாந்தில் படிப்பு முடிக்கும் மாணவர்கள், வேலை செய்ய விரும்பினால் அதற்கென தனி விசா பெற விண்ணப்பிக்க வேண்டும் என்று கூறினார். இதற்கு இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

பல்கலைக்கழகங்கள் கூறுகையில், மாணவர்கள் விசாவில் பல கெடுபிடிகளை அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் கொண்டு வந்தன. அதனால் உயர் கல்வித் துறையில் சர்வதேச போட்டியை சமாளிக்க முடியாமல், அந்த விதிகளை அந்த நாடுகள் வாபஸ் பெற்றன. அந்த நிலை இங்கிலாந்து அரசுக்கு வரக் கூடாது என்று எச்சரித்துள்ளன.

## சீன ஏவுகணையால் இந்தியாவுக்கு ஆபத்து

### அமெரிக்கா எச்சரிக்கை




(நியூயோர்க்)

அணு ஆயுதத்துடன் கூடிய சீன ஏவுகணையால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது. அமெரிக்க விஞ்ஞானிகள் குழு சீனாவின் அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் பற்றி ரகசிய ஆய்வு நடத்தினார்கள். அந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் சீனா பக்கத்து நாடுகளை அச்சுறுத்தும் வகையில் அணு ஆயுதங்களை குவித்து இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

சீனா சமீபத்தில் ஏவுகணை சோதனை நடத்தியது. இவை 7200 கி.மீ. தூரம் பாய்ந்து சென்று எதிரியின் இலக்கை தாக்கக்கூடிய சக்தி வாய்ந்தது. அதில் அணு ஆயுதங்கள் பொருத்தப்பட்டு போர்க் கப்பல்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இது போல் அணு ஆயுதங்களுடன் கூடிய 4 ஏவுகணைகளை போர்க்கப்பலில் வைத்துள்ளது.

இந்த ஏவுகணைகளால் இந்தியா-ரஷ்யாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவை இந்தியா- ரஷ்யாவை தாக்கக்கூடிய வகையில் குறி பார்த்து நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் சீனாவிடம் 240 அணு ஆயுதங்கள் உள்ளன. சீனாவின் ஏவுகணை அமெரிக்காவையும் மிரட்டும் வகையில் உள்ளது.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட தூரம் 2000 கி.மீ. இந்த இலக்கை தாக்கக்கூடிய ஏவுகணைகள் சீனாவிடம் உள்ளது. தற்போது 7200 கி.மீ.வரை நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவு கணைகளை தயாரித்து இருப்பதன் மூலம அது இந்தியா, ரஷ்யா மட்டுமல்ல அமெ ரிக்காவை கூட தாக்கக்கூடியதாகும். எனத் தெரிவிக்கப்படுகிறது.



ஜப்பானின் அரண்மனையில் நடந்த வருடாந்த பாரம்பரிய திருவிழாவில் அந்நாட்டு இளவரசர் ஹிஸ்சாஹிட்டோ இளவரசி அகிஸ்ஹினோ ஆகியோர் தலைநகர் டோக்கியோவில் உள்ள அரண்மனையில் பொதுமக்கள் முன்பு நிற்பதைக் காணலாம்.

## அதிசயக் குழந்தை



இந்தோனேசியாவில் மூன்று தலைகளுடன் பிறந்த ஆண் குழந்தைக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

வடக்கு சுமத்ராவின் பின்ஜாய் நகரில் வசிக்கும் கூலித் தொழிலாளியின் மனைவிக்கு கடந்த சனியன்று ஆண் குழந்தை பிறந்தது.

4 கிலோ எடையில் பிறந்த அந்த குழந்தைக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இருப்பினும் குழந்தை நீண்ட காலத்துக்கு உயிருடன் இருக்கும் என்று கூறமுடியாது என மருத்துவர்கள் தெரிவித்தனர்.


## எகிப்துக் கப்பலில் தீ விபத்து

(கெய்ரோ)

செங்கடலில் சென்று கொண்டிருந்த, எகிப்து நாட்டுக்குச் சொந்தமான பயணிகள் கப்பலில், திடீர் தீ விபத்து ஏற்பட்டது. கப்பலில் பயணித்த ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த ஒருவர் இறந்தார். மற்ற 1,229 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

சவுதி அரேபியாவில் இருந்து புறப்பட்ட இந்தக் கப்பல், ஜோர்டான் வழியாக எகிப்து நோக்கிச் சென்று கொண்டிருந்தது. கப்பலில் இருந்த, 1,230 பயணிகளில், பெரும்பாலானோர் எகிப்து நாட்டினர். கப்பல் ஜோர்டான் நாட்டின் அகுபா துறைமுகம் தாண்டி, எகிப்துக்கு அருகே வந்தபோது, திடீரென தீப்பற்றி, எரிய தொடங்கியது.

அதிர்ச்சியடைந்த கப்பல் அதிகாரிகள், எகிப்துக் கடற்படைக்கு தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த கடற்படையினர், கடும் போராட்டத்திற்கு பின், தீயை அணைத்தனர். இந்தச் சம்பவத்தில் ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த ஒருவர் பலியானார். மற்ற 1,229 பேர் உயிர் தப்பினர். உயிர் தப்பியவர்களில் பலர் சிறு சிறு படகுகள் மூலம் மீட்கப்பட்டு கரை சேர்க்கப்பட்டனர். மேலும் பல பயணிகள், கடலில் குதித்து, நீந்தியபடி கரை சேர்ந்தனர்.



# கூட்டமைப்புக்கு கதிரைகள்தான் முக்கியம்!



முத்துக்குமார் கட்டுரையிலிருந்து...

இந்தியாவின் செல்வாக்கின் கீழுள்ள கூட்டமைப்பினர் அதனை மீறி அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டிருப்பர் என்பதை நம்புவதற்கில்லை. இந்தியா - அமெரிக்கா இணைந்த ஒரு கூட்டு முயற்சியாகத்தான் இது இருக்க முடியும். தன்னால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எதுவும் பயனளிக்காத நிலையில் அமெரிக்காவை இது விடயத்தில் இந்தியா பங்காளியாகச் சேர்த்திருக்கலாம். தென்னிலங்கையில் இருநதுவரும் இந்திய எதிர்ப்பிலிருந்து தப்புவதற்கு இவ்வணுகுமுறை அதற்கு உதவக்கூடும்.

கூட்டமைப்பு தன்னளவில் ஒரு சுயாதீனமான அமைப்பல்ல. இந்தியாவின் செல்வாக்கிற்குட்பட்ட அமைப்பு. அதனால் அது இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்குள்ளேயே நின்று செயற்படப் பார்க்கும். இந்தியாவின் நிகழ்ச்சி நிரல தமிழ் மக்களின் அபிலாசைகளோடு ஒத்துப்போகின்ற ஒன்றல்ல.

தனது புவிசார் நலன்களுக்காக தமிழ் மக்களை விட இலங்கை அரசினைப் பாதுகாக்கவே இந்தியா விரும்புகின்றது. அதற்காக எந்தப் பிரயோசனமும் அற்ற பதின்மூன்றாவது திருத்தத்துடன் தமிழ் மக்களின் அபிலாசைகளை அது முடக்கப் பார்க்கின்றது.

அண்மைக்காலமாக கூட்டமைப்பினரின் நடத்தைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்றதாக இருக்கவில்லை. தேசியப் பட்டியல் உறுப்பினர் சுமந்திரனின் பிரித்தானிய உரை, புதுடில்லி மாநாட்டில் தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை முன்னிறுத்தப் பின்னின்றமை, தானே விதித்த நிபந்தனைகளைக கைவிட்டு இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்க பேச்சுவார்த்தைக்கு ஓடோடிச் சென்றமை, தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஒரு தேசத்தின் சுயநிர்ணயப் பிரச்சினையாகப் பார்க்காமல் சம உரிமைப் பிரச்சினையாகப் பார்க்கின்றமை, கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியை ஆதரிக்க இறுதிவரை பின்னின்றமை போன்ற தொடர செயற்பாடுகள் மக்களுக்கு நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்தி இருந்தன.

கசிந்து வருகின்ற தகவலின்படி பதின்மூன்றாவது திருத்தத்தை கூட்டமைப்பு ஏற்க இருப்பதாகவும் அதனை அரசாங்கம் அமுல்படுத்தினால் போர்க் குற்ற விசாரணையை கைவிட தயார் என அமெரிக்காவிற்கு கூற இருப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

கூட்டமைப்பினர் அதனை தமிழ் மக்களிடம் விற்க விரும்புகின்றனர். ஆனால எதனைக்கூறி விற்பது எனத்தெரியாமல திணறுகின்றனர்.

இந்தியாவும், அமெரிக்காவும் போர்க் குற்ற விசாரணைப் பிரச்சினை நீண்ட காலம் இழுபடுவதை விரும்பவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, போருக்கு ஒருவகையில் இந்த நாடுகளும் காரணமாக இருந்திருக்கின்றன. அதுவும் இந்தியாவிற்கு பல நேரடிப் பங்களிப்பே உண்டு. இந்தியாவின் போரை நாம் நடத்தினோமென ஜனாதிபதியே கூறியிருக்கின்றார். வெள்ளைக் கொடி விவகாரம் விசாரணைக்கு வந்தால் இந்தியாவின் பங்கு மேலும் வெட்ட வெளிச்சமாவதற்கும் வாய்ப்பு உண்டு. எனவே இந்தப் போர்க்குற்றப் பயமுறுத்தலை தமது நலன்களின் அடைவிற்கு மட்டும் என அவை மட்டுப்படுத்த விரும்புகின்றன.

இரண்டாவது, மிக முக்கிய காரணம் அரசியல் தீர்வுகள் எதுவும் இல்லாமல் போர்க்குற்ற நெருக்கடி நீண்டு செல்லுமாயின் அது இனப்படுகொலை என்ற நிலைக்கே வளர்ந்து செல்லும். இவை வளரும் போது சர்வதேச ஆதிக்க நாடுகளுக்கும் குறிப்பாக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் இதனை ஏற்கவேண்டி வரும். இனப்படுகொலையை ஏற்றால் அரசியல் தீர்வு தனிநாடாகவே இருக்க முடியும். அந்த நிலைக்கு வருவதை இரு நாடுகளும் தற்போது விரும்பவில்லை. அவற்றின் பூகோள நலன்களுக்கு அது ஏற்றதல்ல. எனவே அதற்கு முன்னர் போர்க குற்ற நெருக்கடியை முடிக்கப் பார்க்கின்றன.

வெளித்தோற்றத்தில் தமிழ்த் தேசியக கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளை அமெரிக்க அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுவதாகவும் அமெரிக்க அரசாங்கம் அவற்றை பொறுமையாகக கேட்பதாகவுமே தெரியும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் அமெரிக்காவிற்குத் தெரியாத ஒன்றல்ல. கூட்டமைப்பினரை விடவே அதற்குக் கூடத் தெரியும். விக்கிலீக்ஸ் தகவல்கள் அவற்றைப் போதுமானளவு நிரூபித்துள்ளன.

அமெரிக்கா இந்தச் சந்திப்புக்கு அழைப்பு விடுத்தமை கூட்டமைப்பினரிடமிருந்து தகவல்களைத் தெரிந்து கொள்வதற்கல்ல. மாறாக தனது செலவாக்கிற்குள் வருவதற்கான அழுத்தங்களை அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்கும் மேலே கூறியது போல பதின்மூன்றாவது திருத்தத்துடன் அரசியல் தீர்வை மட்டுப்படுத்துவதற்கும் போர்க் குற்ற விசாரணையை முடக்குவதற்குமேயாகும்.

அமைப்பைப் பொறுத்தவரை தமிழ்த தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்டுறுதியான அமைப்பல்ல. தேர்தலுக்காக மட்டும் கூட்டுச்சேர்ந்த ஒரு கதம்பக் கூட்டம். அரசியல் பலவீனமுள்ள இக்கதம்பக் கூட்டத்திடம் பிரக்ஞைபூர்வமான அரசியற் செயற்பாடுகளை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

இரண்டாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தேசிய இயக்கமல்ல. அது ஒரு பாராளுமன்றக் கட்சியே. பாராளுமன்றக் கட்சிக்கு கதிரைகள் தான் முக்கியம். அவற்றிற்கு கதிரை அரசியலை நடத்தத் தெரியுமே தவிர ஒரு தேசிய இயக்க அரசியலை நடத்தத் தெரியாது. ஆனால், தமிழ் மக்களின் இன்றைய தேவை ஒரு பாராளுமன்றக் கட்சியல்ல. உலகம் தழுவிய வகையில் தமிழ் மக்களின் அனைத்து விவகாரங்களையும் கையாளக்கூடிய ஒரு தேசிய அரசியல் இயக்கமே.

அத்தகைய வலுவான தேசிய அரசியல் இயக்கம் இல்லாமல் தமிழ் மக்களுக்கான அரசியலை ஒருபோதும் கறாராக முன்னெடுக்க முடியாது. வெகுஜனத் தன்மை வாய்ந்த அந்தத் தேசிய இயக்கத்தினுள் இந்தப் பாராளுமன்றக் கட்சிகளையும் உள்ளடக்கலாம். ஆனால் அவை தன்னிச்சையாகச் செயற்பட அனுமதிக்க முடியாது. தேசிய இயக்கத்தின் இலக்குகளின் ஒரு பகுதியான பாராளுமன்ற பக்கத்தை நிறைவேற்ற மட்டும் அதனை அனுமதிக்க முடியும்.




# அமெரிக்கா என்ன செய்யப் போகிறது?

பனிப்போர் காலத்து இராஜதந்திரம் எல்லாம் இப்போது செல்லாக்காசாகி விட்டது.

தனக்கு விரும்பாத நாடு ஒன்றுடன் உறவுகளை வைத்துக் கொண்டால், அந்த நாட்டையும் சேர்த்தே கைகழுவி விடுவது தான் பனிப்போர் கால இராஜ தந்திரம்.

அமெரிக்கா, ரஷ்யா போன்றவை மட்டுமன்றி அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக கூறிய இந்தியாவும் கூட கிட்டத்தட்ட இதே கொள்கையைத் தான் கடைப்பிடித்தது.

ஆனால் இப்போது நிலைமை அப்படியில்லை. அமெரிக்காவோ ரஷ்யாவோ இந்தியாவோ அல்லது சீனாவோ- தமக்கு வேண்டாத நாடுகளுடன் உறவுகளைக் கொண்டிருந்தாலும், அந்த நாடுகளை எப்படி மடக்கிப் போடலாம் என்றே சிந்திக்கின்றன.

அந்தவகையில் தான் இலங்கையை இப்போது அமெரிக்காவும், இந்தியாவும் பார்க்கின்றன. சீனாவின் செல்வாக்கிற்குள் இலங்கை அகப்பட்டுக் கொணடாலும் அதனை தூர ஒதுக்கி வைத்து விட அமெரிக்காவும் சரி, இந்தியாவும் சரி- தயாராக இல்லை.

இலங்கை மீதான எத்தகைய வெறுப்புகள் இருநதாலும், தாம் அதனை தூர விலக்கி வைக்கும் போது இன்னமும் சீனாவுடன் அதிகமான நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் என்று அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் கருதுகின்றன.

அவ்வாறு சீனாவுடன் நெருக்கமாவதை இந்தியாவும் அமெரிக்காவும் விரும்பவில்லை. காரணம் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் தான்.

இதிலிருந்து ஒரு விடயத்தை நாம் புரிந்து கொளவது அவசியம். இலங்கைக்கு அமெரிக்கா நெருக்கடிகள் கொடுக்கும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும், ஆனால் அடித்து விரட்டாது.

தனக்கு விரோதமான நாடுகளுடன் உறவுகளைக் கொண்டிருந்தாலும், இலங்கையை கழற்றி விட அமெரிக்கா தயாரில்லை.

அமெரிக்காவுக்குப் பிடிக்காத நாடுகளிடம் இருந்து இலங்கையை மெல்ல மெல்ல விடுவிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகிறது. கடைசியாக இலங்கையுடன எஞ்சியிருக்கப் போவது சீனாவாகத் தான் இருக்கும்.

சீனாவை முறியடிக்க அபிவிருத்தி, வர்த்தகம், இராணுவ உறவுகள் என்று பல்வேறு நெருக்கங்களின மூலம் அமெரிக்கா உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள விரும்புகிறது. இது ஒருவித இராஜதந்திரம்.

ஒன்றைப் பெறுவதற்காக இன்னொன்றை இழத்தல என்பது மனிதவாழ்வில் இயல்பானதொரு விடயமே.

இப்போது தமிழர்கள் பலரும் போர்க்குற்றங்களையே தமது பலமாக கருதுகின்றனர்.

முன்னர் விடுதலைப் புலிகளிடம் இருந்த ஆயுதங்கள் கொடுத்த பலத்தை, இப்போது போர்க்குற்றங்கள் கொடுத்திருப்பதாகவே பலரும் கருதுகின்றனர்.

ஆனால் அது எவ்வளவு காலத்துக்கு- எந்தளவுக்குப் பயன்தரக் கூடியதென்பது விவாதத்துக்குரிய விடயம்.

போர்க்குற்றச்சாட்டுகளை வெறுமனே கூறிக் கொண்டிருந்தால் அதில் பெறுமதி இருக்காது- அதற்கான ஆதாரங்களும் சர்வதேச ஆதரவும் அவசியம்.

இலங்கையின் பக்கம் அமெரிக்கா சாயத் தொடங்கினால் மேற்குலக ஆதரவும் இல்லாது போய்விடும்.

எனவேதான் நெருக்கடி கொடுக்கும் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை அரசுடன் பேசி ஒரு அரசியல் தீர்வுக்கு வர கூட்டமைப்பை நெருக்குதலுக்குள்ளாக்க அமெரிக்கா முனைகிறது.

போர் முடிவுக்கு வந்தவுடன் அமெரிக்கா வலியுறுத்திய இரண்டு விடயங்களில் ஒன்று நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், மற்றது அரசியல் தீர்வு.

அரசியல்தீர்வை அமெரிக்கா வலியுறுத்தக் காரணம், இலங்கையில் மீண்டும் ஒரு போர் வந்து விடககூடாதென்பதற்குத் தான்.

அவ்வாறு மற்றொரு போர் வந்து விட்டால் சீனாவின் பிடிக்குள் இலங்கை இலகுவாக வீழ்ந்து விடுமஎன்பது அமெரிக்காவுக்கு நன்றாகவே தெரியும்.

எனவே தான் போர் ஒன்று மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்க அமெரிக்கா முனைகிறது. அதற்காகவே அரசியல்தீர்வுக்கு வலியுறுத்துகிறது.

அமெரிக்கா ஒன்றும் தமிழர்கள் சார்பாகவோ மனச்சாட்சியின் பக்கம் நின்றோ பேசுவதாக யாரும் கருதக் கூடாது.

அமெரிக்கா தனது நலன்களை முன்னிறுத்தியே எதையும் செய்யும்- அந்த வகையில் தான் இலங்கை விவகாரமும் அணுகப்படுகிறது.

சிறிது காலத்துக்கு முன்னர் அமெரிக்காவுக்கு இத்தகைய நோக்கங்கள் ஏதும் இருக்கவில்லை. ஆனால் இப்போது சீனாவை முறியடிக்க அமெரிக்காவும் தனது பங்கிற்கு ஏதாவது செய்தாக வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

இதனால் தான் தமிழர்களுக்கு அரசியல்தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்க அமெரிக்கா முனைகிறது. அதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பும் விடுக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்கள் எந்தளவுக்கு நன்மை பயக்கக் கூடியதென்பதை உடனடியாக ஊகிக்க முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில், கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் உள்ள முதன்மையான பெண் அதிகாரி ஒருவர் தன்னிடம் கூறியதாக 'புதினப் பலகை' இணையத்தளத்தில் தி.வழுதி என்ற கட்டுரையாளர் எழுதியுள்ள குறிப்பிட்டுள்ள ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தம்.

'இலங்கையைப் பொறுத்தவரை, 80% உள்ள சிங்கள இனத்தைப் பகைத்துக் கொண்டு எம்மால் எதனையும் அடைய முடியாது.

ஏனென்றால் - எமக்கு ஒத்துவரவில்லை என்பதற்காக ஆட்சியில் இருக்கும் ஒரு கட்சியை அகற்றி விட்டுத் தேர்தலை நடத்தினால் கூட, திரும்பவும் ஒரு சிங்களக் கட்சி தான் ஆட்சியில் அமரப் போகினறது. அந்தச் சிங்கள ஆட்சியோடு தான் நாம் வேலை செய்ய வேண்டியும் இருக்கும்.

அடிப்படையில் பார்த்தீர்களானால், நாங்களும் கூட, சிங்களவர்களுக்குப் பிடித்தவற்றை மட்டும் தான் சொலலவோ, செய்யவோ முடியும். வேறு வழியில்லை.

இந்தக் கருத்துகளில் வெளிப்படும் உண்மைகளின் அடிப்படையில் பார்க்கும் போது, தமிழர் பிரச்சினையில் அமெரிக்கா என்ன செய்யப் போகிறது? எதைச் செய்யப் போகிறது? என்ற கேள்விக்கு ஓரளவுக்காவது பதில் கிடைக்கும்.

அந்தப் பதில் என்னவென்பதை இந்தப் பத்தியில் கூறப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் அவரவர் தமது அறிவுக்கமைய தேடிக் கொள்வதே பொருத்தமானது. அதனை இன்னொருவர் திணிப்பது பொருத்தமானதாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.

- கே.சஞ்சயன் கட்டுரையிலிருந்து.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை பெற்றுத்தர உறுதியளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மிக விரைவில் வேலை வாய்ப்பினை பெற்றுத்தருவேன் என கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் உறுதியளித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட வேளை நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் வேலையற்ற பட்டதாரிகளை நாவாந்துறை சோனகத் தெருப்பகுதியில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகள் தங்கள் குறைகளை அமைச்சரிடம் தெரிவித்தனர்.

அவ்வேளை கருத்துரைத்த அமைச்சர் தனக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களின்போது கட்டம் கட்டமாக வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவேன் எனத் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தில் கடந்த காலங்களில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள பட்டதாரிகளை முன்னிலைப் படுத்தி அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொடுப்பது என்பது ஒரு பிரச்சினையாகவே இருக்கின்றது. இருப்பினும் சந்தர்ப்பம் கிடைக்கும் வேளைகளில் நிச்சயமாக வேலைகளைப் பெற்றுத்தருவேன் என உறுதியளித்தார். (எஸ்)

## காணிப்பிரச்சினையை....

இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்ந்தாலும், சிங்கள மக்களே பெரும்பான்மையின மக்களாக உள்ளனர். நாம் அனைவரும் இலங்கைப் பிரஜைகளே. வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களே செறிந்து வாழ்கின்றனர். இதனால் அந்த மாகாணத்திலுள்ள காணிகள் அனைத்தும் வடக்கு மக்களுக்கே சொந்தம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது தவறாகும். ஏனென்றால், எமது பகுதியில் தமிழ் மக்களும் வாழ்கின்றனர். அங்கு சிங்களவர்களின் காணிகளைப் பிடித்துக்கொண்டு தமிழர்களும், தமிழர்களது காணிகளைக் கட்டிப்பிடித்துக்கொண்டு சிங்களவர்களும் பேசுவதில்லை. போராடவும் மாட்டார்கள்.

எனினும், வடக்கில் அனைத்து வளங்களும் தமிழ் மக்களுக்கு மட்டும் என்று சிலர் நினைக்கிறார்கள். அவ்வாறு நாங்களும் நினைத்தால் எங்களது பிரதேசத்திலுள்ள தமிழ் மக்கள் எங்கே போவார்கள்? நாங்கள் அப்படிச் செய்வதுமில்லை.

கலாசாரம், பரம்பரை இரகசியங்களைப் பாதுகாப்பது அனைவரது உரிமைகளாகும். அதில் எவரும் தலையிட முடியாது. ஆனால், தமிழ், சிங்கள வேறுபாட்டுடன் செயற்படும் தமிழ்க் கட்சிகள் தங்களது வரட்டு கௌரவத்தை தணித்துக்கொள்ள வேண்டும் என்றார்.

## படையினர் வசமுள்ள...

அத்துடன் இந்தியாவிலிருந்து மீளவும் தமது பகுதிகளில் மீள் குடியமர்ந்து வரும் மக்களுக்கு விசேட திட்டத்தினூடாக உதவித் திட்டங்கள் வழங்கப்படுவதற்கேற்ற நடவடிக்கையெடுக்கப்படுமெனத் தெரிவித்த அமைச்சர் பொலிகண்டிப் பகுதியிலுள்ள நிலவன் குடியிருப்புக்கு உடனடியாக தற்காலிக மின்னிணைப்பை வழங்குமாறு மின்சார சபைக்கு பணிப்புரை விடுத்தார். பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை, பிரதேச சபைப் பகுதிகளிலுள்ள குப்பை கூழங்களை அகற்றுவது தொடர்பில் உறுதியானதும் இறுதியானதுமான முடிவுகளை எடுத்து செயற்படுத்த வேண்டுமெனவும், பொதுமக்களுக்கு எவ்விதத்திலும் இடையூறு ஏற்படாத வகையில் குப்பைகளை அகற்ற வேண்டுமெனவும், தற்காலிக ஏற்பாடாக, கரவெட்டி பிரதேச சபைக்கு தலா 250 ரூபா வீதம் செலுத்தி குப்பைகளை அகற்றுமாறும் குறிப்பிட்ட சபைத் தலைவர்களுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படக் கூடிய பயிர்ச்செய்கை தொடர்பில், விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்சர் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்திலும் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

அப்பகுதிக்கான அரச மற்றும் தனியார் பேருந்துகளின் சேவைகள், அவற்றின் விஸ்தரிப்பு, வேகக் கட்டுப்பாடு போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

நேற்றைய கூட்டத்தின் போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), பிரதேச செயலர் வரதீஸ்வரன், பொலிஸ் மற்றும் இராணுவ உயரதிகாரிகள், த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## தனியார்...

நிறுவனங்கள் அரசால் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் சில நிறுவனங்கள் இலாபத்தில் இயங்கும் நிறுவனங்கள் குறிப்பாக பெலவத்த மற்றும் செவனகல சீனி தொழிற்சாலைகள் இதில் அடங்குகின்றன.

இதேவேளை பாரிய ஊழல் மோசடிகளினால் பெரும்பாலான அரச நிறுவனங்கள் பாரிய அளவில் நட்டத்தை எதிர்கொண்டுள்ளன. கடந்தாண்டில் மாத்திரம் 106 அரச நிறுவனங்களில் 6193 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் கடந்த பத்து மாதத்திற்குள் வெளிநாடுகளில் இருந்து 519 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுள்ளது. இன்று நாடு பாரிய கடன் சிக்கலில் பொருளாதார வீழ்ச்சியை நோக்கியுமே பயணித்துக் கொண்டிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை...

அடைந்துள்ளதாகவும், உறுதி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது. இதனால் அகதிகளை திருப்பி அனுப்பலாம் என்றும் சுவிற்சர்லாந்து நீதிமன்றம் கூறியுள்ளது.

சுவிற்சர்லாந்து நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பினால் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

## மன்னார்...

இடமாற்றத்திற்கு உட்படுத்தப் படவுள்ளனர். மன்னார் மாவட்டத்திற்கான புதிய அரசாங்க அதிபராக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இரண்டு பாரிய திட்டம்...

நிர்மாண ஒப்பந்தம் நேற்று முன்தினம் கொழும்பு - 7 இல் உள்ள மகாவலி நிலையத்தில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

இந்நிகழ்வில் நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஒப்பந்தத்தில் நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஐவன் டி சில்வாவும் சீனாவின் கம்ஸி இன்ஜினீயரிங் கம்பனியின் தலைவர் லியோ யேங்கும் கைச்சாத்திட்டனர்.

176 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த ஒப்பந்தத்தின்படி நான்கு ஆண்டுகளுக்குள் யான் ஓயா நீர்த்தேக்கம் தொடர்பான முழுமையான திட்டங்களை குறிப்பிட்ட சீன நிறுவனம் நிர்மாணித்து முடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கின் விவசாய உற்பத்தியை அதிகரித்தல், உள்நாட்டு மீன்பிடியை அபிவிருத்தி செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகளை அதிகரித்தல் ஆகிய காரணிகளை முதன்மைப் படுத்தி இத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாக நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு கூறியுள்ளது.

அதேவேளை, கொழும்பு காலிமுகத்திடல் நில விற்பனை ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட சீன நிறுவனத்துக்கு மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பிரிவை புதிதாக அமைக்கும் வாய்ப்பை அரசாங்கம் வழங்கவுள்ளது.

சீனாவின் தேசிய வான் பொறியியல் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கூட்டுத்தாபனம் காலிமுகத்திடல் நிலத்தைக் கொள்வனவு செய்து ஐந்து நட்சத்திர விடுதி மற்றும் பொழுது போக்கு வணிக வளாகத் தொகுதியை 500 மில்லியன் டொலர் செலவில் அமைக்கத் திட்டமிட்டிருந்தது.

ஆனால், இந்த ஒப்பந்தத்தின்படி நிலத்தை விற்பனை செய்ய முடியாது என அரசாங்கம் அண்மையில் நிபந்தனை விதித்ததால் இவ்வொப்பந்தம் முடிவுக்கு வந்தது. இந்நிலையில், மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிலையத்தை ஹோமகமவுக்கு இடமாற்றம் செய்வதற்கான கட்டுமாணப் பொறுப்பை ஒப்படைக்க அமைச்சரவை கடந்தவாரம் அனுமதி வழங்கியுள்ளது.

89.55 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த திட்டத்திற்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதுடன், இதற்கான கட்டுமானப் பணிகளுக்கும் சீனாவே நிதியுதவி வழங்கவுள்ளது.

# யாழ். மாநகர சபையில் இலங்கை வங்கிக் கிளை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் வளாகத்தில் இலங்கை வங்கியின் விரிவாக்கல் வங்கிச் சேவை நேற்று முதல் யாழ். மேற்றரக் கிளையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா இந் நடமாடும் வங்கிச் சேவையை நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார். இவ்வங்கிச் சேவையானது கிழமையில் 5 நாட்கள் காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை இலங்கை வங்கியினால் வழங்கப்படவுள்ளது.

இதன்மூலமாக யாழ். மாநகர சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் அடங்கலாக 1250 மாநகர சபையினர் தமது சம்பளக் கொடுப்பனவை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் ஏனைய வங்கி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும். இவ் அலுவலகத்தில் ஒரு வங்கி அதிகாரியும், காசாளர் ஒருவரும் கடமையாற்றுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை வங்கி மேற்றரக் கிளையின் முகாமையாளர் ஏ.மகாதேவா, முதல்வரின் செயலாளர் பற்குணராசா, மாநகரசபைச் செயலாளர், மாநகர சபை உறுப்பினர்கள், ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை வங்கி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஏற்கனவே யாழ். மாநகரசபையின் வளாகத்தின் முன்பகுதியில் கொமர்ஷல் வங்கியானது பணமாற்று இயந்திரமொன்றை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## ஐ.நா.தவறிழைத்தால்...

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் கேட்கப்பட்டபோது, அவர்கள் விரும்பினால் அதனைச் செய்ய முடியும் என்று அமைச்சர் பதிலளித்துள்ளார்.

2009 ஜனவரி முதல் மே வரையில் இலங்கையில் இடம்பெற்ற நிகழ்வுகள் குறித்து சுயாதீனமாக தோரயாவால் விசாரணை மேற்கொள்ள முடியாது என்று அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அச்சமயம் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப்பிரதிநிதியாக இருந்த நீல்புனேயின் அறிக்கை தொடர்பாக பீரிஸின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

உதாரணமாக, உணவு விநியோகம் (நிறுத்தம்) தொடர்பான குற்றச்சாட்டுகள் அவர் (புனே) எழுதியிருந்த அறிக்கைக்கு நேரடியாக முரண்பட்டுள்ளது. அவர் இங்கு களத்தில் இருந்தார். என்ன நடக்கின்றது என்பதை அவர் நேரடியாக அறிந்திருந்தார் என்று பீரிஸ் கூறியுள்ளார்.

என்ன நடக்கின்றது என்பது தொடர்பாக தூதுவர்கள் சிலரும் அறிந்திருந்தனர். ஏனெனில் அவர்களும் சம்பந்தப்பட்ட குழுவில் இருந்தனர். குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்பதை அவர்கள் யாவரும் அறிவார்கள் என்றும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.


## வெளிநாடு சென்று...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடு சென்றுள்ள கூட்டமைப்பினர் எந்தவொரு இடத்திலும் தனித் தமிழீழம் தொடர்பாக கருத்துக்களை வெளியிடவில்லை. அத்தோடு தமிழ் அரசியல் தலைவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றமை இது முதற்தடவையல்ல. கடந்த காலங்களிலும் தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்காத போது பல தமிழ் தலைவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

அது மட்டுமல்ல இன்றைய ஜனாதிபதி கடந்தகால ஆட்சியாளர்கள் மனித உரிமைகளை மீறுவதாக ஐ.நா. சென்று முறைப்பாடுகளை செய்துள்ளார். தமிழ் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல பல்வேறு காலகட்டங்களில் சிங்களத் தலைவர்களும் ஆட்சியாளர்களுக்கு எதிராக வெளிநாடுகளுக்குச் சென்று முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வை வழங்காததன் காரணமாகவே தலைவர்கள், வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். தீர்வுகள் கிடைக்குமானால் வெளிநாடு சென்று முறையிடும் தேவை ஏற்படாது. ஆனால் பேரினவாதிகள் இனவாதத்தை தூண்டுகின்றனர். தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதை தடுக்கின்றனர். இதனை இவர்கள் கைவிட வேண்டும். தமிழர் பிரச்சினைக்கு தீர்வை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# பத்து வருடங்களின் பின்னர் நடைபெற்ற தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம்





(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் 37 ஆவது மாநாடு நேற்றுக் காலை 9.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் தண்டாயுதபாணி, வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் வி.நி.சகாதேவராஜா, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் ஸ்தாபகர் மகாசிவம், இலங்கை பெஸ் (Fes) வதிவிடப் பிரதிநிதி மெற்றினா மேஜர் பிரதம விருந்தினராகவும், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் உட்பட ஆசிரியர் பலர் கலந்து கொண்டனர்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர்களின் தேசிய மாநாடு 2001 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற நிலையில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, கொழும்பு, வவுனியா என இலங்கையின் பல இடங்களிலிருந்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கு பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# மூன்றாம் தவணைக்கு முன்னர் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்



(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் யாவும் நிறைவடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய மற்றும் பழைய பாடவிதானங்களுக்கு அமைய பெறுபேறுகள் இம்முறை வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவிக்கிறார்.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு இரண்டு இலட்சத்து 94 ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். மூன்றாம் தவணை பாடசாலை விடுமுறைக்கு முன்னதாக உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையில் தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக வேறு அடையாள ஆவணங்களைப் பயன்படுத்தியவர்களின் பெறுபேறுகளை இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அனுர எதிரிசிங்க குறிப்பிட்டார்.

# மாணவனைக் கடத்தி கப்பம் கேட்ட சந்தேக நபர்கள் வசமாக மாட்டினர்

(கொழும்பு)

கொழும்பின் முன்னணி பாடசாலை மாணவன் ஒருவரைக் கடத்தி 50 இலட்ச ரூபாவை கப்பம் பெறுவதற்கு முற்பட்ட சம்பவத்தின் சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவனை கடத்திச்செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனத்தை கைப்பற்றியதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வாகன சாரதி எஹெலியகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. கல்கிஸ்ஸ பிராந்தியத்தின் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து இரண்டு பிரதான சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இந்த சந்தேகநபர்கள் வேறொரு கொள்ளைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

கப்பம் பெறும் நோக்கில் கடத்திச் செல்லப்பட்ட மாணவன் கொழும்பின் புறநகர்ப் பகுதியொன்றில் கைவிட்டுச் சென்றுள்ள நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன் மாணவனை விடுவிப்பதற்காக சுமார் மூன்று இலட்சம் ரூபா ஏற்கனவே கப்பமாக வழங்கப்பட்டுள்ளது என தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களை கைது செய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## காயமடைந்தவர் உயிரிழந்தார்

வத்தளை கெரவலப்பிட்டிய பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தேசிய வைத்தியசாலையின் தீவிர கண்காணிப்பு பிரிவில் சிகிச்சைப் பெற்று வந்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை வர்த்தக நிலையமொன்றுக்கு அருகில் வைத்து குறித்த இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய சொகுசு வாகனத்தை கண்டு பிடிப்பதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மற்றுமொரு செய்தி 09 ஆம் பக்கத்தில்)

# இரவு நேர சேவையை கண்காணிக்க குழுக்கள்



(கொழும்பு)

அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிலும் இரவுநேர சேவையைக் கண்காணிக்கும் வகையில் விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவு, இரவு நேரங்களில் செயற்படும் எனில், அவை உரிய முறையில் செயற்படுகின்றதா? என்பதனை அவதானிக்கும் நோக்கிலேயே இவ்வாறு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் பாலித மஹீபாலவின் தலைமையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள பிரதான வைத்தியசாலைகள் பலவற்றில் இந்த கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது அவதானிக்கப்படும் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சு விடுத்துள்ள அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜே.வி.பியின் புதிய பெயர்ப்பட்டியல் தேர்தல் ஆணையரிடம் கையளிப்பு


(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அங்கத்தவர்களின் புதிய பெயர்ப் பட்டியல் ஒன்று கட்சியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வாவினால் தேர்தல்கள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

கட்சிச் செயற்குழுவின் அனுமதியுடனேயே இந்தப் புதிய உறுப்புரிமை பெயர்பபட்டியல் கையளிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார். கடந்த பெப்ரவரி மாதம் மக்கள் விடுதலை முன்னணியின் மாநாடு இடம்பெற்றது. அதன் பின்னர் மத்திய குழு, அரசியல் குழு, போன்றவற்றுக்குத் தெரிவானவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலே தேர்தல்கள் ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## தங்கமணி தங்கபாஸ்கரன் (தோழர் பாச்சா)



சென்னை முகப்பேரில் தனது குடும்பத்துடன் வசித்து வந்த தோழர் பாச்சா என்று அனைவராலும் அழைக்கப்படும் தங்கமணி தங்கபாஸ்கரன் 01.11.2011 அன்று சிறுநீரகக் கோளாறு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியை சென்னை முகப்பேரில் எதிர்வரும் திங்கட்கிழமை (07.11.2011) அன்று நடைபெறும்.

வடமராட்சி நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் தங்கபாஸ்கரன், இன்முகத்துடன் பழகும் தன்மையாலும், அவரது இயல்பான நகைச்சுவை உணர்வாலும் எல்லோரையும் கவர்ந்திருந்தார். சிறந்த மிருதங்கக் கலைஞராகவும், இசைக் கலைஞராகவும் தமிழ்நாட்டிலும் புகழ்பெற்றிருந்த பாச்சா, 50க்கும் மேற்பட்ட பக்திப் பாடல்கள் ஒலி நாடாக்களை வெளியிட்டுள்ளார். வேதா என்ற திரைப்படத்தில் அவர் ஒரு பாடலையும் பாடியுள்ளார். இவரது தந்தையார் தங்கமணி அவர்களும் சிறந்த கலைஞராக எல்லோராலும் அறியப்பட்டவர்.

இவர் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறோம்.

- தோழர்கள்

# புதிய பெயர்ப்பட்டியல் சட்டவிரோதமானது

## ஜே.வி.பி. கிளர்ச்சிக்குழு

(கொழும்பு)

கட்சிக்குள் பிரச்சினைகள் இருக்கும் போது கட்சியின் அங்கத்துவ அறிக்கையை தயாரிப்பதானது சட்டவிரோதமானதாகும் என ஜே.வி.பியின் கிளர்ச்சி குழு தெரிவித்துள்ளது.

கிளர்ச்சி குழு உறுப்பினரான ஜே.வி.பியின் மத்திய செயற்குழு உறுப்பினர் புது ஜெயகொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சியில் தேன்றியுள்ள குழப்ப நிலைகளுக்கு மத்தியில், கட்சியின் அங்கத்துவ அறிக்கை தயாரிப்பதானது, ஏற்றுக் கொள்ள முடியாத செயல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பியின் அங்கத்தவர்களது பெயர் உள்ளடங்கிய புதிய பட்டியல் தேர்தல்கள் ஆணையாளருக்கு, கட்சியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வாவினால் அனுப்பப்பட்டது.

இந்தப் புதிய பெயர்ப் பட்டியலுக்கு கட்சியின் மத்திய செயற்குழு தமது ஆதரவினை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் மத்திய செயற்குழு, அரசியல் சபை, மற்றும் கட்சியின் அங்கத்தவர்களது பெயர் உள்ளடங்கியவகையில் இந்த புதிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த மத்திய செயற்குழு கூட்டத்திற்கு, செயற்குழுவின் உறுப்பினர் என்ற வகையில் தமக்கு அழைப்பு எதுவும் விடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் புபுது ஜெயகொட குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிக்கையில்,



தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட பெயர் பட்டியலானது கட்சியில் புதிதாக இணைந்து கொண்ட அங்கத்தவர்களது பெயர் மாத்திரமே என குறிப்பிட்டார்.

முன்னர் அனுப்பப்பட்ட கட்சியின் அங்கத்துவ பட்டியல் இதன்காரணமாக செல்லுபடியாகாது எனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.